Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, [illegible]
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 23 (09.10.2004) சனிக்கிழமை இதழ்: 09

# ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியை இராணுவ தலைமைப்பீடம் கலைத்தது!

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஒரு அங்கமாக இயங்கிவந்த ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியை (எல்.ஆர்.ஆர்.பி.) அரசாங்கம் கலைத்துவிட்டதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாவை மையமாகக் கொண்டு செயற்பட்டுவந்த ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியைக் கலைத்துவிடுமாறு இராணுவத் தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவையடுத்தே அது கலைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஒகஸ்ட் 18 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விசேட படையணி கலைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படையணியில் பணியாற்றிவந்த இராணுவ அதிகாரிகள் முன்னர் பணியாற்றிய படைப்பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தரப்பை மேற்கோள் காட்டும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரணவால் தோற்றுவிக்கப்பட்ட ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி வன்னியிலும் மட்டக்களப்பிலும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுள் ஊடுருவிபல தாக்குதல்களை நடத்தியிருந்தது.

தமிழ் ஆயுதக் குழுக்களின் உதவியுடன் இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் இணைந்து இந்தப் படையணியை வழிநடத்திவந்தனர்.

இந்தப் படையணியின் தாக்குதலில் சிக்கியே புலிகளின் மூத்த தளபதி கேணல் சங்கர், கடற்புலிகளின் துணைத் தளபதி லெப். கேணல் கங்கைஅமரன் மற்றும் லெப்.கேணல் நிஸாம் உள்ளிட்ட பல போராளிகள் உயிரிழக்க நேரிட்டது.

ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியினரின் இரகசிய நடவடிக்கைகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணான ஆயுதங்களை பயன்படுத்தி வந்தமையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அத்துருகிரிய முற்றுகையின் போது அம்பலமாகியிருந்தது.

இந்த இராணுவ சிறப்பு அணியினர் – கருணா குழுவினருடனும் தொடர்புகளைப் பேணி வந்த நிலையில் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிக்கு உதவிகளை அளித்து வந்த தமிழ் ஆயுதக்குழுக்களின் முக்கியஸ்தர்கள் பலர் அண்மைக்காலத்தில் அடுத்தடுத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் இந்தப் படையணியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் படைத்தரப்பு எதிர்நோக்கிய நெருக்கடிகளாலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (01)

## பிறந்த சிசுவை கொன்றதாக சந்தேகத்தில் தாய் கைது!

பிறந்த சிசுவை தலையில் அடித்து கொலைசெய்து புதைத்தார் எனத் தெரிவித்து, குறித்த சிசுவின் தாயாரை நெல்லியடிப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

அல்வாய் கிழக்கு அல்வாயைச் சேர்ந்த

## பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த சுவிஸ் வெளியுறவு அமைச்சர்

## பிறந்த சிசுவை கொன்றதாக சந்தேகத்தில் தாய் கைது!

பிறந்த சிசுவை தலையில் அடித்து கொலைசெய்து புதைத்தார் எனத் தெரிவித்து, குறித்த சிசுவின் தாயாரை நெல்லியடிப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

அல்வாய் கிழக்கு அல்வாயைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதர்வது -

கடந்த திங்கட்கிழமை வீட்டில் குழந்தை பிரசவித்ததால் குறித்த பெண்ணுக்கு இரத்தப்பெருக்கு ஏற்பட்டு கட்டுப்படுத்தமுடியாத நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பாக குறித்த பெண்ணிடம் விசாரித்த வைத்திய அதிகாரி இந்தச் சம்பவம் தொடர்பாக பொலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் தவறி வீழ்ந்து 11/2 வயது குழந்தை பலி!

வேலணைப் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்த குழந்தையொன்று பரிதாபகரமாக மரணமானது.

இந்தச் சம்பவம் வேலணை 4ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது. ஒன்றரை வயதான ரவிச்சந்திரன் கபிலேஸ் என்ற குழந்தையே மரணமடைந்ததாகும்

மரணமடைந்த குழந்தை வீட்டில் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் ஒருமணிநேரம் கழிந்த பின்னர் குழந்தையைக் காணவில்லையென தேடிச் சென்றபோது, குழந்தை வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் உள்ள கிணற்றில் வீழ்ந்து இறந்த நிலையில் காணப்பட்டது.இந்தக் குழந்தையின் சடலம் பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

எரிபொருட்களுக்கான விலையை அரசாங்கம் மீண்டும் அதிகரிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகளை மீளவும் அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம -

எரிபொருட்களின் விலைகளை மீண்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த

# சுவிஸ் வெளியுறவுஅமைச்சர் கொழும்பை வந்தடைந்தார்!

(ஜெனீவா)

இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் சுவிற்சர்லாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மிக்கெலின் கல்மிறே அம்மையார் நேற்று கொழும்பு விஜயத்தை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளின் நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வேக்கு பின்புலமாக இருந்து உதவிவந்த சுவிற்சர்லாந்து அரசாங்கம், முதன்முறையாக இலங்கை விவகாரத்தில் பேச்சுக்களை நடத்துவதற்காக வெளிவிவகார அமைச்சரை கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல்விவகாரக்குழு கடந்த வாரம் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் கூடி சட்டநிபுணர்களுடன் ஆலோசனை நடத்தியிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## திருகோணமலை மாவட்டத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு!





(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று பூரண கடையடைப்பு இடம்பெற்றதால் அங்கு வழமை நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் இதுவரை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவில்லை.

இனவாத சக்திகள் சமாதான முன்னெடுப்புக்கு எதிராக மேற்கொண்டுவரும் சதி நடவடிக்கைகளுக்கு எதிராகவும் -

திருமலை மாவட்டத்தில் தொடரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் புதிதாக விகாரைகள் அமைக்கும் பணிகள் ஆகியன நிறுத்தப்படவேண்டுமெனவும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நிலைமை ஜயந்த தனபால ஆராய்வு!

(திருகோணமலை)

அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால, நேற்று திருகோணமலை மாவட்டத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

நேற்றுக்காலை 11 மணிக்கு திருகோணமலைக்குச் சென்றிருந்த ஜயந்த தனபால, சீனன்குடா பௌத்த விகாரையில் வைத்து வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் பிரதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்களை அகற்றக் கோரி திருகோணமலையில் வீதி மறியல்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியாவிலும், துவரங்காட்டிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ காவலரண்களை அகற்றக்கோரி நேற்று அலஸ் தோட்ட அகதிமுகாமில் தங்கியிருக்கும் அகதிகள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றிற்கும் மேற்பட்ட அகதிகள் நேற்று இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்த வழியான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

கடற்படை வாகனமொன்று அந்தவழியாக

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல்
இலங்கையிலும் -
இந்தியாவிலும்
ஒரேதின
வெளியீடான
ஸ்ரீகாந்த் சினேகா
நடித்த

**போஸ்**



(ரீல்ஸ்)

காட்சி நேரம்:11.00,3.00,7.00,10.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

10 ஆம் திகதிவரை

அர்ஜுன்,
சாரா தத்தா,
விவேக்,
ரகுவரன்
நடித்த



காட்சிநேரம்
10.30,2.30, 6.30 (பு.நே)
சனி, ஞாயிறு இரவு 9.30 மணிக்கும்

**அரசாட்சி**

11 முதல்
திருடா திருடி

(சி-2725)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், மஞ்சுளா,
நாகேஸ் நடித்த

**ரிக்ஷாக்காரன்**

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

அடுத்த வெளியீடு **மதுர**

(சி-2723)


## சிறு விளம்பரம்


### முகமதி கிறைண்டிங் மில்

வெள்ளைப்பிட்டுக் கலவை, சிவப புப்பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை ஆகியவற்றை மொத்தமாக வும், சில்லறையாகவும பெற்றுக் கொள்ள முகமதி கிறைண் டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3249)


## குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

திருகோணமலை விக்னேஸ் வரா மகா வித்தியாலயத்தில் இன் றும் நாளையும் நடைபெறவி ருந்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தின் ஆட்சிமன்றக் குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.


**WEDGE** ®

யாழ் மண்ணில்...
தொழில்நுட்பத்தில் ஓர் அதிரடி அறிமுகம்

விசேட சலுகை
Rs.31,650/-
முன்பு
Rs.35,650/-

கையிருப்பில்
உள்ளவரை மட்டுமே!



MEC 21" COLOUR TELEVISION + WEDGE DVD 838Y

Made in Malaysia - 3 year Warranty
- 21" Super Flat Picture Tube
- 256 Channel Memory
- AV Stereo
- Sleep Timer
- Multi System with NTSC, Hyper Band Tuner
- Full Function Remote with On-Screen Display
- 3 Sets of Audio/ Video Terminals for DVD/ VCD Connections

- DVD / DVD-R / MP 3 / CD-RW / CD / VCD / SVCD / Play Back Facility
- DTS, AC-3 Double De-Coder with 5.1 Channel Out
- 32 Language Subtitles and 8 Sound Languages
- Child Lock
- Multi-Region/ Multi-System
- Optical and Coaxial Audio Output
- Super 9 Grades Error-Correction
- Full Function Karaoke Facility
- Progressive Scanning
- 96 KHz / 24-bit Stereo Studio ADCS

விற்பனைப் பொருட்கள் : Home Theater Systems, DVD Players, VCD Players, Amplifiers, Speakers, Sound Systems, Karaoke Microphones, Largest Collections of Karaoke VCD & Musical DVD Disks.

Sole Agent :
Access
Access Marketing (Pvt) Ltd
Show room :- Laksman's Bldg., Galle Rd, Colombo 3.
"Access Towers" 278, Union Place, Colombo 2.

ஏகவிநியோகஸ்தர்:- SLS கணனி சேவைகள்
இல. 125 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:- 021-4590686

விற்பனை முகவர்கள் தேவை
Call : 0777-726299

அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்

**சுரபி பதிப்பகம்**

பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள்,
பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள்
மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சுரபி பதிப்பகம்**

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-222 5107

# உலகவங்கியின் உயர்மட்டக் குழுவினர் நேற்றுமுன்தினம் திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

உலக வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் குழு நேற்று முனதினம் திருகோணமலைக்கு விஜய மொன்றை மேற்கொண்டு, உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத்திட்டங்களை பார்வை யிட்டதுடன், அரசசார்பற்ற நிறு வனப் பிரதிநிதிகளையும் சந்தித்து, கலந்துரையாடலை நடத்தியது.

நேற்று முன்தினம் திருமலை தபால் திணைக்கள வீதியுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அலுவலகத்தில், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி களைச் சந்தித்து, தமது திட்டங்கள் தொடர்பாக உலக வங்கியின் திட்ட உத்தியோகத்தர் மோறல் கலந் துரையாடினார். அதில் அவர் தெரி வித்ததாவது -

இலங்கையின் வடக்கு - கிழக் குப் பகுதியில் 95 ஆயிரம் வீடுகள் கட்ட, உலக வங்கியால் 75 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இங்குள்ள பொருட்களின் விலையேற்றம் காரணமாக 70 ஆயி ரம் வீடுகளே கட்டிமுடிக்க உத் தேசிக்கப்பட்டது.

ஆனாலும், உத்தேசிக்கப்பட்ட வீடொன்று 1 லட்சத்தி 10 ஆயிரம் ரூபா செலவிலேயே கட்டத் தீர் மானிக்கப்பட்டது. இருந்தும் ...ற்போதைய பொருட்களின் விலையேற்றத்தின் காரணத்தால், ஒரு வீடு கட்டி முடிப்பதற்கான செலவாக 1 லட்சத்தி 50 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே இந்த அடிப்படையில் எமக்கு ஒதுக் கப்பட்ட 75 மில்லியனுடன் ஒப்பிடு கையில் - 46 ஆயிரம் வீடுகளையே அமைக்க முடியும். எமது நோக்கம், எமக்கு ஒதுக்கப்பட்ட 75 மில்லி யனுக்குத்தான் வீடுகள் அமைப் பதே தவிர, குறிப்பிட்ட எண் ணிக்கைக்கு அல்ல. எனவேதான் இந்த வீடுகளின் எண்ணிக்கையை, நாம் போட்ட திட்டத்தைவிட அரைவாசியாகக் குறைந்துள்ளது. எனவே இந்தத் திட்டத்தை வட க்கு- கிழக்கிலுள்ள 8 மாவட்டங் களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

எம்மால் இந்தத் திட்டம் தற் போது ஆரம்பிக்கப்பட்டு, நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அடுத்துவரும் மூன்றாவது அல்லது நான்காவது வருடங்களில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்பட்டால், அவர்களுக்கு வீட மைத்துக்கொடுக்கவேண்டும் என்ற காரணத்தால், தற்போதைய எமது திட்டத்தின்படி 40 ஆயிரம் வீடு களை அமைப்பது, மிகுதி 6 ஆயி ரம் வீடுகளை அவர்களுக்காக ஒதுக்கி வைத்திருப்பது எமது திட்ட மாகும்.

நாம் நடைமுறைப்படுத்துகின்ற வீட்டுத்திட்டத்தில் - மலசல கூடங் களை அமைக்க முடியாமல் இருக் கலாம். ஏனெனில், ஒரு வீட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவில் இவற்றை அமைக்க முடியாது.

சில அரசாங்க அதிபர்கள் மற்றும் சில தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக நாம் கலந்துரையாடியபோது, அவர்கள் எம்மை முதலில் வீடு களை அமைத்து தருமாறும், மற் றைய தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அவற்றை அமைப் பதாகத் தெரிவித்தனர்.

இதுவரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 860 வீடுகள் பூரணமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆறு மாதத்துக்குள் நடை முறைப் படுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்ட அலுவலர் கலை வர்ணன் தெரிவித்ததாவது -

அடிப்படை வசதிகளை ஈடு செய்யும் விதமாகவே வீடுகளை அமைத்துக்கொடுக்கவேண்டும். வடக்கு - கிழக்கில் இதுவரை கால மும் நடந்த யுத்தத்தினால் 30 ஆயி ரத்துக்கும் அதிகமான வீடுகள் முற் றாக அழிக்கப்பட்டுள்ளன. இலட் சக்கணக்கான வீடுகள் சேதமடைந்த நிலையிலுள்ளன. எனவே, இவர்கள் அனைவருக்கும் வீடுகள் அமைத் துக்கொடுக்கப்படவேண்டும்.

எனவே, குறித்த தொகை நிதியை வைத்துக்கொண்டு வீடு களை அமைக்காமல், ஒரு என் ணிக்கையை மையமாக வைத்து வீடுகளை அமைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் - உலக வங்கிப் பிரதிநிதிகள் திருமலையில் வீட மைப்புதிட்டம் நடைமுறைப் படுத்தப்படும் கம்பன் கோட்டம் நடு ஊற்று பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டனர். (04)

## ஒரு தொகுதி ஆயுதங்கள் வவுனியாவில் மீட்பு!

மன்னார் - வவுனியா வீதியி லுள்ள பனகுளத்தில் ஒரு தொகுதி ஆயுதங்கள் கடந்த புதன்கிழமை மாலை வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த தக வலையடுத்து, ரி-56 ரக துப்பாக்கி - 01, கைக்குண்டுகள் - 05, ரி-81 ரக தன்னியக்கத் துப்பாக்கி - 01 ஆகிய ஆயுதங்களே மீட்கப்பட்டன.

குறிப்பிட்ட கிராமத்தில் மீள் குடி யேற்றத்திற்காகப் புனரமைப்பு பணி கள் தற்போது நடைபெற்று வரு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு மாணவர்கள் ஒன்றியத்தினர் - விடு தலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு கிரிபத்கொடவல் நடத்திய பேரணி.

# அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்துப் பேசத் திட்டம்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - எதிர்வரும் திங்கட்கிழமை மல் வத்தை, அஸ்கிரிய பீடாதிப திகளைச் சந்தித்துப் பேச்சுக் களை நடத்தத் திட்டமிட்டுள்ள னர்.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மல் வத்தை பீடாதிபதி திப்பொட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்திக்கும் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள், தொடர்ந்து அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்த தேரரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

வட - கிழக்குத் தமிழ் மக்களின் அபிலாசைகள் மற்றும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் நியாயத் தன்மை என் பன குறித்து, கூட்டமைப்பினர் பௌத்த பீடாதிபதிகள் இரு வருக்கும் விளக்கிக் கூறவுள்ள தாகத் தெரியவருகிறது.

அத்துடன், சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், இது தொடர்பான புலிகளின் நிலைப்பாடு தொடர்பாகவும் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர்கள் பௌத்த பீடாதிபதிகளுக்கு எடுத்துக் கூறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந் தன் தலைமையிலான நாடாளு மன்ற உறுப்பினர்களே, இந்தச் சந் திப்பில் கலந்து கொள்ளவுள்ள னர்.

# அடுத்தமாதம் முதல் மின்கட்டணம் உயர்வு

(கொழும்பு)

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் இலங்கை முழுவதற்குமான மின்கட்டம் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதற்கமைய முதல் 30 அலகுகள் வரை அலகொன்றுக்கு மூன்று ரூபாவும், 31 முதல் 60 வரையான அலகொன்றுக்கு 3 ரூபா 70 சதமும், 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு அலகொன்றுக்கு 4 ரூபா 10 சதமும், 91 முதல் 180 வரையான அலகுகளுக்கு அலகொன்றுக்கு 11 ரூபா 40 சதமும், 180 இற்கு மேற்பட்ட அலகு ஒவ்வொன்றுக்கும் 16 ரூபா 40 சதமும் அறவிடப்படவுள்ளது.

இதேவேளை - நிலையான மாதாந்த விதிப்பனவுப் பணமாக மாதம் ஒன்றுக்கு 30 ரூபாவாகவும் அறவிடப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் தலைவர் கொழும்பில்!

(கொழும்பு)

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய அரசியல் பணியக நிலை யியல் குழுத்தலைவர் வூ குவான் செங் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில் இங்குவந்துள்ள வூ குவான்செங் தலைமையிலான குழுவில் - சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் பலர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் கொழும்பில் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, சீனா ஆகிய நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இவர்கள் அரசியற் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இவர் - ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலரைச் சந்தித்து உரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியா விஜயம்



(கொழும்பு)

எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற் றுக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியா செல்லும் இவர் - அங்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தங்கிநின்று, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், பாதுகாப்பு ஆலோசகர் கே.என்.டிக்சி உட்படப் பலரை சந்தித்து உரையாட வுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தச் சந்திப்பில் இரு நாடு களுக்கிடையிலான அரசியல், பொருளாதார உறவுகள் குறித்தும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப் படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை இந்தியா செல்கிறார். அங்கு ரணிலை ஹெல்கிசன் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பர்க உரையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கணினிமயமாகவுள்ள நீதிமன்றப் பணிகள்

(கொழும்பு)

நீதிமன்றங்களின் பணிகள் யாவும் கணினிமயப்படுத்தப்பட வுள்ளதாக நிதிச்சேவை ஆணைக் குழுவின் - செயலாளர் அறிவித் துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் நீதி மன்றங்களின் பணிகள் தற்போது கணினிமயப்படுத்தப்பட்டுள்ள நிலை யில் ஏனைய மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கான பணி களையும், கணினி மயப்படுத் துவதற்கு நீதிச்சேவை ஆணைக் குழு முயற்சி எடுத்துள்ளது.

'விரைவில் அனைத்து நீதி மன்றங்களின் பணிகளையும், கணினி மயப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் நீதிச்சேவையைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்லாறு குண்டு வீச்சில் குடும்பஸ்தர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்முனை வீதி யில் கல்லாறு என்னுமிடத்தில் கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தில், 54 வயது குடும்பஸ்தரொருவர் காய மடைந்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

காயமுற்றவர் - நாகப்பன் பாஸ்கர லிங்கம் என இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை களை நடத்திவரும் களுவாஞ்சிக் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் சென்று கொண்டி ருந்தபோதே இனந் தெரியாதவர்கள் கிரனேட் வீசியதாக தெரிவிக்கப்படு கிறது.

தனிப்பட்ட பிரச்சினை காரண மாக இந்தச்சம்பவம் இடம்பெற் றிருக்கலாம் என பொலிஸார் கருத் துத் தெரிவித்தனர்.

# ஜெயந்த தனபாலவின் திருமலை விஜயம் ஒத்திவைப்பு!

(திருகோணமலை)

திருகோணலையில் நேற்று ஹர்த்தால் இடம்பெற்றதால். அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தனது திருகோண மலைக்கான விஜயத்தை ஒத் திவைத்தார்.

ஏற்கனவே, திட்டமிட்ட இவரது விஜயத்தின்படி நேற்றுக் காலை 9.00 மணிக்கு வடகது - கிழக்கு மாகாண சிங்கள அமைப்பு பிரதி நிதிகளைச் சீனன்குடா பௌத்த விகாரையில் சந்திக்க திட்டமிட்டி ருந்தார்.

இதன்பின்னர் - மாலை 2.00 மணிக்கு மதத் தலைவர்கள், சமூ கப் பிரதிநிதிகள், அரச அதிகாரி கள், மற்றும் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளை வடக்கு - கிழக்கு மாகாண விருந்தினர் விடுதியில் சந்தித்து, சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடலை நடத்தவிருந்தார்.

ஆனால், நேற்று திருமலையில் ஹர்த்தால் நடைபெற்றதால், தனது விஜயத்தை ஒத்திவைப்பதாகவும், இதற்கான திகதி பின்னர் அறிவிக் கப்படும் எனவும், அவர் தெரிவித் துள்ளார். (04)

## 16 அகதிகள் மன்னார் திரும்பினர்

இந்தியாவில் தங்கியிருந்த மேலும் 16 தமிழ் அகதிகள் தலை மன்னாரை வந்தடைந்தனர்.

கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் இவர்களை மீட்ட கடற்படையினர், தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.







# பெங்களூர் டெஸ்ட்; அவுஸ்ரேலியா 4/127

(பெங்களூர்)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இனிங்ஸில் ஆடிய அவுஸ்ரேலிய அணி, 4 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நடைபெற்றுவருகிறது.

முதலில் விளையாடிய அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 474 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் முதல் இனிங்ஸில் விளையாடிய இந்தியா நேற்றுமுன்தினம் 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்களை எடுத்திருந்தது. பார்த்தீவ் பட்டேல் 18 ஓட்டங்களுடனும் பதான் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் நடைபெற்றது. மேலும் 125 ஓட்டங்கள் எடுத்தால் பொலேஒன்னை தவிர்க்கலாம் என்ற நிலையில் இந்தியா தொடர்ந்து ஆடியது.

பதானும் பார்த்தீவ் பட்டேலும் மிகவும் பொறுமையாக ஆடினர். அவர்கள் பொலேஒன்னை தவிர்ப்பதற்காகப் போராடினர்.

மதிய உணவு இடைவேளைக்கு சற்று முன்னர் இந்த ஜோடி பிரிந்தது. இர்பான் பதான் 31 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை வோர்ன் கைப்பற்றினார். அப்போது இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 196 ஆக இருந்தது. பட்டேல் - பதான் ஜோடி 7 ஆவது விக்கெட்டுக்காக 60 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து கும்ளே களமிறங்கினார்.

மதிய உணவு இடைவேளையின்போது இந்தியா 7 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களை எடுத்திருந்து. பட்டேல் 35 ஓட்டங்களுடனும் கும்ளே 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நன்றாக ஆடிக்கொண்டிருந்த பார்த்தீவ் பட்டேல் மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் ஆட்டமிழந்தார். அவர் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 227 ஆக இருந்தது. அதன்பின்னர் கும்ளே சிறிதுநேரம் தாக்குப்பிடித்து ஆடினார்.

இந்திய அணி 89.2 ஓவர்களில் 246 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மெக்ராத் 4 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

29 ஓட்டங்கள் குறைவாக எடுத்ததால், இந்தியா பொலே ஒன் ஆனது. ஆனால், அவுஸ்ரேலிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் பொலே ஒன் கொடுக்கவில்லை.

228 ஓட்டங்கள் முன்னிலையில் அவுஸ்ரேலியா இரண்டாவது இனிங்ஸை ஆடியது. ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே லாங்கர் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை இர்பான் பதான் கைப்பற்றினார். 2 ஆவது விக்கெட்டுக்கு ஹைடனுடன் காடிச் ஜோடி சேர்ந்தார்.

ஹைடன் 30 ஓட்டங்களுடனும் காடிச் 39 ஓட்டங்களுடனும் லேமன் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களை எடுத்தது.

இர்பான் பதான், ஹர்பஜன், கும்ளே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.







## இந்தியா பாகிஸ்தான் மோதல்; நடுவராக லொயிட் நியமனம்!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின பவள விழாவையொட்டி இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடத்தப்படவிருக்கிறது.

இந்தப் போட்டி நவம்பர் 13 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கான ஐ.சி.சி. நடுவராக மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னாள் கப்டன் கிளைவ் லொயிட் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆடுகள நடுவர்களில் ஒருவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சைமன் டவ்பெல் ஆவார். இன்னொரு நடுவர் இந்தியர் ஆவார். அவரது பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையேயான டெஸ்ட் தொடருக்கு டாரல் ஹார்பர், சைமன் டவ்பெல் (அவுஸ்ரேலியா) நடுவர்களாகவும், ஐ.சி.சி. போட்டி நடுவராக நியூசிலாந்து முன்னாள் கப்டன் ஜெப்குரோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நியூசிலாந்து அணிக்கு வெட்டோரி நியமனம்!



பங்களாதேஷ் செலலும் நியூசிலாந்து ஒரு நாள் அணிக்கு சுழல் பந்து வீச்சாளர் வெட்டோரி கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கு இந்த மாத இறுதியில் நியூசிலாந்து சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது.

இந்தப் போட்டிக்கான நியூசிலாந்து ஒரு நாள் அணிக்கே சுழல் பந்து வீச்சாளர் வெட்டோரி கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பிளமிங் காயம் காரணமாக அணியில் இடம்பிடிக்காத சூழ்நிலை ஏற்படும்போது மாற்று கப்டனை தயார்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வாய்ப்பு வெட்டோரிக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக பயிற்சியாளர் தெரிவித்தார்.

ஒருநாள் அணியில் மூத்த வீரர் மக்மில்லன் சேர்க்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டிக்கான அணிக்கு வெட்டோரி துணை கப்டனாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஒருநாள் போட்டிக்கான அணியில் கப்டன் பிளமிங் இடம்பிடிக்கவில்லை. அதுபோல் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேக்கப் ஓரம்-ஓரம்கட்டப்பட்டார்.

அவுஸ்ரேலியாவுடன் நடக்க உள்ள மோதலுக்காகவே அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

## உலகக் கிண்ணத்தை வெல்வதே லட்சியம் என்கிறார் டெண்டுல்கர்!



உலகக் கிண்ணத்தினை வெல்லவேண்டும் என்பதே என்னுடைய லட்சியம் என்று டெண்டுல்கர் கூறியுள்ளார்.

முழங்கை வலிகாரணமாக கடந்த 7 வாரமாக அவதிப்பட்டுவரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

இதன்காரணமாக டெண்டுல்கர் தற்போது எடை குறைந்த மட்டையில் பயிற்சிசெய்து வருகிறார். முதல் டெஸ்ட் போட்டிக்கான உடல் தகுதி சோதனையிலும் தேறவில்லை.

இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறுகையில், எடை குறைந்த மட்டை பயன்படுத்துவதால் என்னுடைய வலியில் பெரியமாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவே நான் இதேமாதிரியான சோதனையில் ஈடுபட்டேன். ஆனால் சரியான பலன் கிடைக்கவில்லை.

பலமுறை முயற்சி மேற்கொண்டும் என்னால் உலகக் கிண்ண வெற்றியை ருசிக்கமுடியவில்லை. தென்னாபிரிக்காவில் நடந்த போட்டி யின்போது இந்த வெற்றி கடைசியில் நழுவியது. உலக கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதே என்னுடைய லட்சியம் என்றார்.

## இந்தியா - பாகிஸ்தான் ஹொக்கி சமநிலையில் முடிவடைந்தது!

(சண்டிகர்)



இந்தியா-பாகிஸ்தான் ஹொக்கி அணிகள் 8 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதி வருகின்றன. முதல்கட்டமாகப் பாகிஸ்தானில் 4 ஆட்டங்கள் நடந்து முடிந்தன.

இதில் பாகிஸ்தான் 2-1 என்ற புள்ளியில் முன்னணி பெற்றது. இதன்பின்னர் பாகிஸ்தான் அணி இந்தியா வந்தது. இந்தியாவில் நடந்த முதல் ஆட்டத்தில் 3-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளும் மோதிய 6 ஆவது ஆட்டம் சண்டிகரில் கடந்த புதனன்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றமுடியும் என்ற நிலையில் பாகிஸ்தான் களம் இறங்கியது.

இதை நிருபிக்கும் வகையில் பாகிஸ்தான் வீரர்களின் வேகம் அதிகமாக இருந்தது. ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் பாகிஸ்தான் வீரர் கசன்பார் அலி ஒரு கோல் போட்டார். அடுத்த சில நிமிடங்களில் இந்திய வீரர் இக்னேஷ் டிரிக்கி பதில் கோல் அடித்தார்.

இதன் காரணமாக ஆட்டம் 1-1 என்ற சமநிலை அடைந்தது. தொடர்ந்து 2 அணிகளும் கோல் போட முயற்சி மேற்கொண்டன. ஆனால், யாருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்திய அணிக்கு 5 பெனால்டி வாய்ப்புகள் கிடைத்தன. இந்த வாய்ப்புக்களை இந்திய வீரர்கள் கோட்டைவிட்டனர். மேலும் சில கோல்வாய்ப்புகளையும் இந்திய அணியினர் தவற விட்டனர். இதனால் 1-1 என்ற கோல் கணக்கில் இந்த ஆட்டம் சமநிலை அடைந்தது.

## பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம்!

அடுத்த ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகள் விஜயம் செய்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் தென்னாபிரிக்க அணி - மேற்கிந்தியத் தீவுகளுக்கு விஜயம் செய்து நான்கு டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதற்கு சில தினங்களின் பின்னர் பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு விஜயம் செய்யும்.

பார்படோஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய இடங்களில் இரு டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று ஒருநாள் பேட்டிகளிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் பாகிஸ்தான் அணி மோதும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். கோட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயத்துக்கு உட்பட்ட யாழ். கோட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிமுதல் 6 போட்டிகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

14 ஆவதுப் பிரிவில் - புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து புனித ஜோசேப் மகாவித்தியாலயமும், 16 வயதுப் பிரிவில் - புனித ஜோசேப் மகாவித்தியாலத்தை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும், 18 வயதுப் பிரிவில் - புனித ஜோசேப் மகாவித்தியாலயத்தை எதிர்த்து புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயமும், 14 வயதுப் பிரிவில் - நாவாந்துறை றோ.க. வித்தியாலத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் 16 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயமும், 18 வயதுப் பிரிவில் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் மோதும் போட்டிகள் நடைபெறவுள்ளன. (58)

## உதைபந்தாட்ட தரவரிசை பிரேசில் முதலிடத்தில்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட உதைபந்தாட்ட தரவரிசைப் பட்டியலில் 845 புள்ளிகளுடன் பிரேஸில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாமிடத்தை 799 புள்ளிகளுடன் பிரான்ஸும், மூன்றாம் இடத்தை 778 புள்ளிகளுடன் ஆர்ஜன்ரீனாவும் பெற்றுள்ளன. ஏற்கனவே மூன்றாமிடத்தில் இருக்கின்ற ஸ்பெயின் 774 புள்ளிகளுடன் நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பட்டியலில் ஹொலண்ட் 755, செக்குடியரசு, 751, இங்கிலாந்து 739, போர்த்துக்கல் 735 இத்தாலி மெச்சிக்கோ 734 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளன.

## உதைபந்தாட்ட பயிற்சியாளருக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி முகாம்!

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட பயிற்சியாளர் பயிற்சி முகாம் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றுவதற்கு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் பகுதிக்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்தும் கழகங்களிலிருந்தும் ஒரு பயிற்றுவிப்பாளரை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளையும், கழகங்களையும் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு.பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார். (58)

## உங்கள் கைவண்ணம்





இ.பார்த்தீபன், தரம் - 9
குப்பிளான் விக்கினேஸ்வரா
மகா விதத்தியாலயம்

## தெரிந்து கொள்ளுங்கள்

* எம்மில் ஒவ்வொருவரும் எம்முடைய பிறந்தநாளை ஒரு கோடி நபர்களோடு சேர்ந்து கொண்டாடுகிறோம். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? சிலருக்கு அது முதல் பிறந்தநாளாக இருக்கலாம். வேறு சிலருக்கு அது 75 ஆவது பிறந்த நாளாகக்கூட இருக்கலாம்.

* முயல்கள் தாவிச் செல்லும், குதிக்கும். ஆனால் அவற்றால் நடக்க முடியாது.

* எந்த தட்பவெப்ப நிலையிலும் எல்லா நாடுகளிலும் இருக்கும் ஒரே மிருகம் நாய்.

* உலகின் மிக நீண்ட மலைத் தொடர், இமயமலை அல்ல. 19 ஆம் நூற்றாண்டுவரை கண்டுபிடிக்கப்படாமல் அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களுக்கிடையே அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அடியில் இருக்கும் மிட் அட்லாண்டிக் ரீட்ஜ் (நடு அல்லாண்டிக்கின் மலை உச்சி) என்பதே மிக நீண்ட மலைத்தொடர். தண்ணீருக்கு அடியில் 160000 கிலோ மீற்றர் நீளம் பரவியுள்ள இந்த மலைத் தொடர் - கிரீன்லாந்துக்கு வடக்கிலிருந்து அண்டார்ட்டிக்கா வட்டம்வரை விரிந்துள்ளது. இமயமலைத் தொடரின் நீளம் 2575 கிலோ மீற்றர் மட்டுமேதான்.

* சராசரி மனிதனின் சாதாரண நாடித்துடிப்பு ஒரு நிமிடத்துக்கு 70 அல்லது 80 தடவைகள் ஆகும். சிறிய பாடும் பறவையின் இதயம் ஒரு நிமிடத்துக்கு ஆயிரம் முறைகளுக்கு மேல் துடிக்கும்.

* சில சொற்களை, எண்களை வலப்புறமிருந்து திரும்ப வாசித்தாலும் அதே வார்த்தை, எண்வரும். விகடகவி , தேருவருதே 202, 151 என்பதை மேலே சொன்னபடி வாசித்துப் பாருங்கள்.

## சித்திரக்கதை

### தப்பிப் பிழைத்த பறவைக்குஞ்சு



1. கூட்டிலிருந்து பறவைக்குஞ்சு கீழே விழுந்து விட்டது.



2. அக்காவும், தம்பியும் வீட்டுக்குள் குஞ்சைத் தூக்கி வந்தார்கள்.



3. கூட்டுக்குள் இருந்த குஞ்சைப் பார்க்க அப்பாவும், அம்மாவும் வந்தார்கள்.



4. கூட்டை எடுக்க வழி யோசித்தார்கள்.

(தொடரும்...)

## பொது அறிவு

இதுவரை உலகில் போரிடாத நாடு?
- சுவிற்சர்லாந்து

உலகில் அதிகம் முஸ்லிம்கள் வாழும் நாடு?
- இந்தோனேசியா

உலகில் மிகப்பெரிய துறைமுகமுள்ள நாடு?
- நெதர்லாந்து

உலகில் அதிகம் வாக்காளர்கள் உள்ள நாடு?
- இந்தியா

ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
இந்து ஆரம்பப் பாடசாலை.

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு!**
உன்னை ஒருவன் இருமுறை ஏமாற்றினால் அது உன்னுடைய குற்றம்.

# சிறுவர் அரங்கம்

## சூரியனைத் தொலைத்த கன்றுக்குட்டியார்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

சூரியன் உமது நண்பனா? என்று ஆச்சரியத்தோடு கேட்டார் முயல் குட்டியார். ஆமாம்! ஆமாம் சூரியன் எனது அருமை நண்பன். அவனை நான் தொலைத்து விட்டேன் என்று கண்களில் கண்ணீர் பெருகக் கவலையோடு சொன்னார் கன்றுக்குட்டியார்.

முயற்குட்டியாருக்கோ தலை இலேசாகச் சுற்றியது, வானத்தில் உலாவி, உலகுக்கே வெளிச்சம் கொடுத்திடும் சூரியன் எப்படி இந்தக் கன்றுக்குட்டியாருக்கு நண்பனாகிட முடியும்?

கன்றுக்குட்டியாருக்கு தலையில் லேசாக அடி ஏதாவது பட்டிருக்குமோ என்ன? என்று கூட நினைத்தார் முயல் குட்டியார்.'



அப்படி ஏதும் இருக்காது. தனது அறியாமையால் தான் - தொலைந்து போன சூரிய நண்பனைத் தேடுகிறார் கன்றுக்குட்டியார் என்பதை நன்கு அறிந்து கொண்டார் - புத்திசாலியான முயல் குட்டியார்.

வீட்டை விட்டு வெளியே வந்து கன்றுக்குட்டியாரைக் கட்டிக்கொண்டு ஆறுதல் சொன்ன குட்டி முயலார் - நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார்.

இருண்ட முகில்கள் இப்போது இலேசாகக் கலைந்து கொண்டிருந்தன. நிச்சயமாக நாளைக்கு வானம் தெளிவாகி விடும் என்று உறுதியாய் நம்பினார் முயல் குட்டியார்.

ஆபத்து நிறைந்த இரவுவேளையிலே, கன்றுக் குட்டியாரைத் தனியாக வெளியே அனுப்ப முயல் குட்டியார் விரும்பவில்லை.

ஆதலால், தனது வீட்டிலேயே அவரைத் தங்க வைத்து, ஆறுதல் சொல்லி, சாப்பிடச் செய்யவும் முடிவு செய்தார்.

கன்றுக்குட்டியாரிடம் ஒரு பொய்யைச் சொல்லத் தீர்மானித்துக் கொண்டார் முயல் குட்டியார். கன்றுக் குட்டியாரே! கன்றுக்குட்டி யாரே - இரண்டு நாட்களுக்கு முன்னதாகத்தான் உமது அருமை நண்பன் சூரியனை நான் சந்தித்தேன்.

முயல் குட்டியார் சொன்னத்தைக் கேட்ட கன்றுக் குட்டியாரின் முகத்தில் - இதுவரை நிலவிய சோர்வும், சோகமும் இருந்த இடம் தெரியாது பறந்து போயிற்று. பாய்ந்து ஓடி வந்து முயல் குட்டியாரை இறுகக் கட்டிக்கொண்டார்.

என்னருமை முயல் குட்டியாரே! என்னருமை முயல் குட்டியாரே - சூரியன் உம்மிடம் என்ன சொன்னான்? என்று ஆவலுடன் கேட்டார்.

கன்றுக்குட்டியாரே! கன்றுக்குட்டியாரே நாளைக்கு நிச்சயமாய் உம்மைச் சந்திப்பதாக சூரியன் என்னிடம் சொன்னான் என்று முயல் குட்டியார் சொன்னார். அத்துடன் நின்று விடாது, அன்றிரவு தனது வீட்டிலேயே கன்றுக் குட்டியாரைத் தங்க வைத்திடுமாறும் சூரியன் தன்னைக் கேட்டுக் கொண்டதாகச் சொன்னார்.

அருமை நண்பன் சூரியனின் பேச்சைத் தட்டுவாரா என்ன கன்றுக்குட்டியார்? முயல் குட்டியாரின் வீட்டிலேயே அன்றைய இரவைக் கழிக்கவும் சம்மதித்தார்.

பொழுது விடிந்தது. முதல் நாள் முழுவதும் காட்டிலே சுற்றி அலைந்து திரிந்த களைப்பிலே ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் கன்றுக்குட்டியார். அதிகாலையிலேயே தூக்கம் கலைந்து எழுந்த முயல் குட்டியார் - வீட்டின் வெளியே ஓடிச் சென்று வானத்தைப் பார்த்தார்.

தெளிவான வானிலே, காலை நேரத்துக் கதகதப் பான கதிர்களைப் பரப்பி அழகாகக் காட்சி கொடுத்தான் சூரியன்.

வீட்டுக்குள் ஓடிச் சென்ற முயல் குட்டியார் - கன்றுக் குட்டியாரைத் தட்டி எழுப்பினார். அவரது கையைப்பிடித்து இழுத்து வந்து, வெளியே வானத்தில் காட்சி கொடுத்த சூரிய நண்பனையும் காட்டினார்.

வானத்திலே சூரிய நண்பனைக் கண்ட கன்றுக் குட்டியார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முயல் குட்டியாரைக் கட்டிக்கொண்டு துள்ளிக் குதித்தார்.

கண்டு பிடித்துவிட்டேன், கண்டு பிடித்துவிட்டேன் தொலைந்து போன எனது சூரிய நண்பனைக் கண்டு பிடித்தவிட்டேன் என்று தாளம் தட்டிப் பாட்டுப் பாடினார்.

கன்றுக் குட்டியாரின் சந்தோஷத்தைக் கண்ட முயல் குட்டியார் - தானும் தாளம் தட்டிக் கன்றுக் குட்டியாரோடு சேர்ந்து பாட்டுப் பாடினார்.

(முற்றும்)

# இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- ஜோ.ஜெப்பிரசன்
பாடசாலை :- யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
தரம் :- 03
ஆர்வமுள்ள துறைகள் :- ஓவியம் வரைதல், கணிதம்.



பெயர் :- இ.ஜெனார்த்தனன்
பாடசாலை :- வைத்தீஸ்வராக் கல்லூரி.
தரம் :- 09
ஆர்வமுள்ள துறைகள் :- ஓவியம் வரைதல், விளையாட்டுத்துறை.



பெயர் :- ஜெ.ராஜீவன்
பாடசாலை :- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- கிரிக்கெட், கதைப்புத்தகம் வாசித்தல், வேற்றுநாட்டு நாணயம் சேர்த்தல்.

பெயர் :- ரீ.சிந்துஜன்
பாடசாலை :- யாழ். இந்துக் கல்லூரி.
தரம் :- 06
ஆர்வமுள்ள துறைகள் :- ஓவியம் வரைதல், பல கண்டுபிடிப்புகள்.

பெயர் :- கு.நிசாந்தன்
பாடசாலை :- யாழ். இந்துக் கல்லூரி.
தரம் :- 06
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு.

பெயர் :- ஸ்ரீ.ரகுராஜ்
பாடசாலை :- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
தரம் :- 05
ஆர்வமுள்ள துறைகள் :- கிரிக்கெட், பத்திரிகை வாசித்தல்.

பெயர் :- க.ஆனந்
பாடசாலை :- பரியோவான் கல்லூரி.
தரம் :- 07
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டுத்துறை, கதைப் புத்தகம் வாசித்தல்.

பெயர் :- க.சுதர்சன்
பாடசாலை :- ஏழாலை மகா வித்தியாலயம்.
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.

## இதிலுள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

சில குறித்த விடயங்களை அவற்றின் முக்கியத்துவம் கருதி தேர்ந்தெடுப்பார்கள். அதற்கென ஒரு தினத்தையும் குறித்து விடுவார்கள். அந்தந்தத் தினங்கள் வரும்போது, அந்த விடயத்தை முன்னிறுத்திக் கொண்டாடுவார்கள்.

இந்த ஒவ்வொரு விடயமும் சமூக, விஞ்ஞான, அறிவியல், மருத்துவம் போன்றவற்றையும், இது போன்ற வேறுபல விடயங்களையும் கருத்திற்கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சில தினங்கள் கொண்டாடப்பட்டுள்ளன. உலக சிறுவர் தினம், முதியோர் தினம், சிறுமியர் தினம், ஆசிரியர் தினம் ஆகியனவாகும். இந்தத் தினங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது அவற்றை அதற்குரிய நாட்களில் மட்டுமே கொண்டாட என்று நினைக்கிறீர்களா? இல்லை.

அந்தத் தினங்களை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவே கொண்டாடபடுகிறது. எனவே, அந்தத் தினங்களின் சிறப்புகளையும், முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளுங்கள். அதுவே அந்தத் தினங்கள் கொண்டாடப்படுவதற்கான பயனாகும்.

பாசமுடன் - சாரு அக்கா

## பழமொழிகள்

1. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா.
2. ஆரால் கேடு, வாயால் கேடு.
3. இறங்கினால் களி, இளகினால் கூழ்.
4. உண்டு கொழுத்தால், நண்டு வளையில் இராது.
5. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை.

மா.நாகவதனி , தரம் - 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## சுற்றிச் சுற்றி வட்டமிடும் பறவை



ஒரு இன கடற்பறவையானது மற்றைய கடல் பறவைகளிடமிருந்து தன் இரையை கொள்ளையடித்தே வாழ்கிறது. அந்தக் கடல் பறவையின் பெயர் ஃபிரிகேட் பறவை என்பதாகும். மற்றைய கடல் பறவைகள் - அலகுகளில் மீன்களைத் தூக்கிச் செல்லும். இந்தப் பறவை அதைச் சுற்றிச்சுற்றி வட்டமிடும். மீனை அந்தப் பறவைகள் கீழே போடும் படியான அளவுக்கு அதைத் தொந்தரவு செய்யும். அவை மீனைக் கீழே போட்டவுடன், அந்த மீனை வானில் இலாவகமாகப் பிடித்துக்கொள்ளும் இந்தப் பறவைகள்.

## சென்றவார விடைகள்

### மூளைக்கு வேலை விடைகள்

1. 1 இன் ஒவ்வொரு வரிசையைக் கூட்டினாலும் ரூபா 48 உம் -
2. 2 இன் ஒவ்வொரு வரிசையைக் கூட்டினாலும் ரூபா 70 வருமாறு அடுக்கி வைத்துள்ளனர்.

### விடுகதை விடைகள்

1. வைக்கோல் - நெல்
2. கத்தரிக்கோல்.
3. மெழுகுவர்த்தி.
4. முருங்கைமரம்.

## என் அன்னை

பத்து மாதம் அவள் வயிற்றில்
பத்திரமாய் எனைச் சுமந்து
உலகிற்கு உவந்தளித்த
உயர் தெய்வம் அவள் தானே
உதிரத்தை பாலாக்கி
உணவாக எனக்களித்து
கண் முன்பே உலாவி வரும்
கடவுள் தானே என் அன்னை
துன்பங்கள் அவளை வந்து
துளைத்தெடுத்த போதெல்லாம்
துவளாமல் எனை வளர்த்த
என் அன்னை தெய்வமே.

வ.சுஜித்தா
வதிரி திரு இருதயக் கல்லூரி
கரவெட்டி.

# அறிவியலுக்கு அடிப்படை கணிதம்

கணிதம் என்பது தனி அறிவியல் இல்லை. அறிவியலுக்கு அதுவே வேர் ஆகும். பல்வேறு இயல்புகளுக்கு அடிப்படையாகத் திகழ்வது கணிதம். கணிதம் - ஒரு அறிவியல் கூறு என்ற அடிப்படையில், பல துறைகளுக்கும் பயன்படுகின்ற காரணத்தினாலேயே இது மிகவும் போற்றப்படுகின்றது.

இயற்கை தந்த இன்பமான மனநிலையைப் பெறுவதற்குக் காரணமாக இருக்கின்ற கண்களுக்கு ஈடாக - எண்ணையும், எழுத்தையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் -

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என உலகிற்குத் தெரிவித்திருக்கின்றார்.

தமிழிலே எழுதப்பட்ட எண்களுக்கு வடிவம் வேறு. ரோமன் எண் வடிவம் வேறு. அரபிக் எண் என்ற வடிவம் வேறு. வடிவங்கள் வேறாக இருந்தாலும், ஒன்று என்று அதைப் பார்க்கிறபோது எண்ணுகிறார்களே. அதேபோல் 3 என்றும், 9 என்றும் எண்ணுகிறார்களே. அந்த எண்ணம் தான் அந்த எண்ணத்தை அவர்களுக்குத் தூண்டுவதற்குக் காரணமாக இருக்கின்ற ஒருகுறிதான் 'எண்'.

கல்வி கடல்போன்றது. அறிவு வான் போன்றது. அறிவியல் வானிலிருந்து தோன்றுகின்ற ஒளியைப் போன்றது. அந்த ஒளிக்கு அளவு எடுக்கின்ற கருவிதான் 'கணிதம'.

1.) 2,3,4,5,6,7 - எண்களால் வகுபடக்கூடிய மிகச் சிறிய எண் எது?

2.) ஒருவர் தன்னுடைய வரவேற்பறையில் சில பொம்மைகளை சதுரவடிவில் வைக்க விரும்புகிறார். சதுரத்தின் ஒரு பக்கத்துக்கு ஐந்து பொம்மைகள் வைக்க விரும்புகிறார். ஒருசதுரத்தை அமைப்பதற்கு எத்தனை பொம்மைகள் தேவை?

# வீதி ஒழுங்கு முறை பேணப்படாததே அதிகளவு வீதி விபத்துக்கு காரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வாகனங்களின் தொகை அதிக ரித்தமையும், வீதி ஒழுங்குமுறைகள் சரியாக நடை முறைப்படுத்தப்படாததாலுமே வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை யில் விபத்துப் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் க.பிரதீபகுமார் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்களுக் கான வீதிப் போக்குவரத்து பற்றிய கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

யாழ்.போதனா வைத்தியசாலையில் தினமும் பலர் விபத்துக்களால் காயப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக் கப்படுகிறார்கள். குறிப்பாக இரவு வேளைகளில் மது போதை காரணமாக பலர் விபத்துக்குள்ளாகிறார்கள். இதனால் அநியாயமான உயிரிழப்புக்கள் மற்றும் அங் கவீனங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் அதிகரித்தமையால், கட்டில்கள் நிறைந்து போயுள்ளன. இதனால் நோயாளர்கள் நிலத்திலிருந்தே சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கவனயீனமான விபத்து காரணமாக விலைகூடிய பல்வேறு வகை மருந்துகள் பாவிக்கப்படு கிறது. எனவே ஒவ்வொருவரும் தாமே உணர்ந்து மிகக் கவனமாகச் செயற்படுவதன் மூலம் விபத்துக்க ளைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

இரவு வேளைகளில் சைக்கிள் ஓட்டுபவர்களின் சைக்கிள்கள் வெளிச்சமின்மை காரணமாகவும், சிறுவர் கள், பெண்கள் உட்பட பலர் காயப்பட்டு வைத்திய சாலைக்கு வருகின்றனர். இந்த விடயத்தில் விழிப் பாக இருப்பது மிகவும் அவசியமானதொன்று.

வீதிச் சைகைகள் அமைப்பது தொடர்பாக பல வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலில் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிச் சைகைகளை அமைத்து பின்னர் நகரப் பிரதேசங்க ளில் இது ஏற்படுத்தப்பட்டு குற்றப் பணங்களை அதிக ரிப்பதன் மூலமே ஓரளவு விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அதுமட்டுமல்லாது மக்கள் அதிகரித்த அளவுக்கு வீதிகளும் அகலமாக்கப்படுதல் வேண்டும்.

வீதிகளில் வியாபார நிலையங்கள் அமைத்தமை, அத்துடன் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் கண்டபடி வாகனங்களை ஓட்டுகின்றமை, அதுமட்டுமல்லாது ஒரு வழிப்பாதையைச் சரியான பாவிக்காமையும் விபத்துக் கள் அதிகம் நிகழ்வதற்கு காரணம்.

எனவே, ஆசிரியர்கள் இந்த விடயம் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதன் மூலம் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள 65 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து சுமார் 80 ஆசிரியர்கள் வரை கலந்துகொண்டனர்.

மேலும், வீதி ஒழுங்கு, முதலுதவி, ஆசிரியர்கள்- மாணவர்களின் நலன் தொடர்பாக கவனிக்கவேண்டிய விடயங்கள் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு, நிகழ்வின் இறுதியில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி கலந்துகொண்ட மையும் குறிப்பிடத்தக்கது. (100)

# கொரிய வதிவிடப் பிரதிநிதி குழு 12 ஆம் திகதி யாழ் வரவுள்ளது!

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்ப நிறுவனமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிக்கான புதிய கட் டட நிர்மாணப் பணிகள், உபகரணம் பொருத்தும் பணிகளை ஆரம்பிக்க வென கொரிய நாட்டின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி கிம்பைங் குவான் தலைமையிலான நான்கு பேர் அடங்கிய குழு எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இந்தக் குழுவில் கொரிய நாட்டு வதிவிடப் பிரதிநிதியுடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகளின் பயிற் சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஓ.குணசிங்க, எம்.குருசிங்க ஆகிய இரு பணிப்பாளர்களும், தெல்பொல என்ற உதவியாளருமே இங்கு வர வுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு வாரம் வரை யாழ். தொழில் நுட்ப நிறுவனத்தில் தங்கியிருக்கும் இவர்கள் புதிதாக கட்டப்படவுள்ள 10 கட்டடத் தொகுதிகளுக்கான ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொள் வதுடன், நிர்மாணப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள் ளமை குறித்து ஆராயவுள்ளதுடன், அவற்றுக்கான நிதியுதவிகள் குறித் தும் நிறுவனத்தின் பணிப்பாளர் நா.யோகராஜனுடன் கலந்தாலோ சிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தொழில்நுட்ப நிறுவனத்தைத் துரித நடவடிக்கையின் மூலம் கட் டியெழுப்பவுள்ளதாக தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் தெரி வித்தார். (ப)

# சிறுவர், பெற்றோர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உலக உள நல நாளை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தால் நடத்தப்படும் சிறுவர், பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்றுகாலை 10 மணி தொடக்கம் பகல் 2 மணிவரை பல்வேறு இடங் களில் நடைபெறுவுள்ளன.

புத்தூர் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வேதவல்லி மாதர்சங்கம், இருபாலை கிழக்கு கந்தவேள் பாடசாலை, நீர்வேலி சுவர்ணா சனசமூக நிலையம், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் போன்ற இடங்களிலேயே இந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.



மானிப்பாய் லியோ கழகத்தால் ஆனைக்கோட்டை முள்ளி ஆதவன் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பால்மா பைக்கற்றுக்களை லயன்ஸ் கழகத் தலைவர் மகேந்திரன் ஆசிரியர்களிடம் வழங்குவ தையும், நடுவில் லியோ கழகத் தலைவர் விஜயகுமார் நிற்பதையும் காணலாம். (91)

# தூய பிரதேச திட்டத்திற்கு நாவாந்துறை தெரிவு!

இலங்கை மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தால் கழிவு கள் அகற்றி தூய பிரதேசமாக மாற்றும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நாவாந்துறைப் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறையின் பல பகுதிக ளில் கழிவுகள் கொட்டப்பட்டு பெரும் சுகாதார சீர்கேடுகள் உருவாகக் கூடிய நிலையைத் தோற்றுவித்துள் ளது. திண்மக் கழிவுகளின் தொகை இப்பகுதியில் அதிகமாகக் காணப் படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை யின் அனுமதியுடன் கழிவுகளை பொதுமக்கள், சமூக நிறுவனங்கள், மாணவர்கள் முதலானோரின் உத வியுடன் கூட்டெருவாக்குதல், புதைத் தல், அப்புறப்படுத்தல் முதலான நடவடிக்கைகள் மூலம் இல்லாதொ ழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் விரை வில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மத் திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். பிராந்திய அலுவலக வட்டாரங் கள் தெரிவித்தன. (ப)

# நூல்களை அன்பளிப்பு செய்து உதவ மானிப்பாய் பிரதேசசபை கோரிக்கை

(மானிப்பாய்)

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் - உள்ளூ ராட்சி நிறுவனங்களின் கீழ் இயங் கும் பொது நூலகங்களில் இந்த மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக் கப்பட்டு வரும் இந்த நிலையில் -

இந்த வாசிப்பு மாதத்தை முன் னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களுக்கு வாசகப் பெருமக்கள் ஒரு வீட்டுக்கு ஒரு நூல் என்ற வகையில், நல்ல நிலையிலுள்ள பாவிக்கக்கூடிய, பயனுள்ள நூல்களை அன்பளிப்புச் செய்து இந்தப் பிரதேச மக்களின் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் தங்க ளின் பங்களிப்பை வழங்கி உதவு மாறு பிரதேச சபையின் செயலா ளர் பி.விக்டர் கேட்டுள்ளார். (100)

# வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கு தெரிவானோரின் பெயர் விபரங்கள்

இலங்கை தொழில் வாய்ப்புத் திணைக்கத்தால் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்காக தெரிவுசெய் யப்பட்டுள்ளோரின் பெயர் விபரங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த மாதம் யாழ்.தொழில்நுட் பக் கல்லூரியில் நடைபெற்ற நேர் முகத் தேர்வில் யாழ்.மாவட்டத்தி லுள்ள தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றோர் தோற்றியிருந்தனர்.

இவர்களில் முதல்கட்டமாக மத் திய கிழக்கு நாடுகளில் பணியாற்ற தெரிவுசெய்யப்பட்டுள்ள 48 பேரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட் டுள்ளன. அவை வருமாறு -

வி.சுதர்சன், ஆர்.சதீஸ், ஜி. மோகனகுமார், ரி.நாகராஜன், கே. லோகசேகர், ரி. சுதாகரன், எஸ்.சிவ குமார், ரி.ராகவன், எஸ்.முருகானந் தன், ரி.விக்னராஜன், கே.சுகிர்தரன், எஸ்.செல்வநாயகம், ஜே.எஸ்.மகேந் திரன், வ.செல்வரட்ணம்.

எஸ்.தனபாலசிங்கம், வி.பிரகலா தன், வை.விமல்ராஜ், எம்.றஜீவ்காந்தி, ஆர்.ரங்கன், கே.விஜயரூபன், எஸ். பிரதீபன் எஸ்.ஜெயந்தன், கே.சுதா கரன், எஸ்.சுரேஸ்குமார், வி.சுதாகரன், கே.சந்திரகாந், எஸ்.சண்முகராஜா, எம்.ஜெயரூபன், எஸ்.சுரேஸ், ஜே. வினோதீபன், எஸ்.வசந்ததாஸ், எஸ. ஜீவராஜா, கே.சுரேந்திரதாஸ், எஸ். பாஸ்கரன், என்.ஜோகீஸ்வரன், ரி. பாலமுரளி, கே.பாலசுப்பிரமணியம்.

என்.தட்சணேஸ்வரன், ரி.கோவை யானந்தன், எ.பரமதாஸ், எம்.குணேஸ் நாயகம், எஸ்.ஐ.நடேசரட்ண சர்மா, ஏ.ரகுணன், எஸ்.கஜாதரன், ரி.றொபி ன்சன், ஏ.ஜனார்த்தனன், எ.பத்ம றாஜ், என்.பாலகிருஸ்ணன் ஆகி யோரே தெரிவுசெய்யப்பட்டனர். (ப)

## கத்தியால் குத்தியவருக்கு 3 மாத சிறைத்தண்டனை

கத்தியால் குத்தி ஒருவரைக் காயப்படுத்திய ஒருவருக்கு 2 வருட ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சாதாரண சிறைத்தண்டனையை நீதிமன்றம் வழங்கியது.

2002 ஆம் ஆண்டு தை மாதம் 21 ஆம் திகதி கோண்டாவில் பகு தியில் வைத்து வே.சசிகுமார் என் பவரைக் கத்தியால் குத்தி காயப் படுத்தியதை குற்றவாளி நீதிவான் முன்னிலையில் ஒப்புக்கொண்ட தற்கு அமைய, மேற்படி நபருக்கு 2 வருடம் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத கால சிறைத்தண் டனை வழங்கப்பட்டது. (தீ)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் உரும்பிராயில் கைது

உரும்பிராய் பகுதியில் மிதிவெடி அபாயமெனக் கூறி கசிப்பு உற்பத் தியில் ஈடுபட்ட நபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் சிவகுல வீதிக்கு அண்மையாக இடம்பெற்றது.

மிதிவெடி அபாயப் பிரதேசம் எனக் கூறி கசிப்பு உற்பத்தி நடை பெறுவதாக பொலிஸாருக்குக் கிடை த்த தகவலையடுத்து அவ்விடத் துக்கு சென்ற பொலிஸார் 525 லீற் றர் கசிப்பு, 4 பரல் கோடா என்ப வற்றைக் கைப்பற்றி மேற்படி நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். (82)

### அசிற் போத்தல் வெடித்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நகைக்கடை ஒன்றில் அசிற் போத்தல் ஒன்று வெடித்ததன் கார ணமாக நபர் ஒருவர் இடது கையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற் றது. சம்பவத்தின்போது 33 வய தான இ.சாந்தன் என்பவரே படுகாய மடைந்தவராவார்.

தனது வேலைத்தளத்தில் சொந்த பாவனைக்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த அசிற்றின் மீது இரும்புத் துண்டொன்று விழுந்ததன் காரணமாகவே அந்தப் போத்தல் வெடித்து, கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலை அவசர சிகிச்சைப் பிரி வில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

### கால்நடைகளை கட்டி வளர்க்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் பெய்த மழையை யடுத்து ஆனைக்கோட்டை, நவாலி, கந்தரோடை, மானிப்பாய், உடுவில் பகுதி விவசாயிகள் நிலத்தைப் பண படுத்தி நெல் விதைப்பில் மும்முர மாக ஈடுபட்டுள்ளனர்.

இவ்வேளையில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் வயல்களில் சென்று நெல் நாற்றுக்களையும், முளைத்து வரும் நெற்பயிர்களையும் சேதப் படுத்தாதிருக்க அவற்றின் உரிமை யாளர்கள் ஆடு, மாடுகளை கட்டி வளர்த்து விவசாயிகளுக்கு ஒத்து ழைப்பு வழங்கவேண்டுமென கேட் கப்பட்டுள்ளது.

இதுபற்றி கடந்த வாரம் ஆனைக கோட்டை, நவாலி பகுதிகளில் ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளது. தேடுவாரற்று காணப் படுகின்ற கால்நடைகள் பிடிக்கப் பட்டு ஏலத்தில் விற்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)



வதிரி வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா ஆசிரம சிறார் - முதியோர் இல்லத்தின் முதியோர் தின விழாவில் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் - இல்லத்தில் கௌரவிக்கப்பட்ட முதியோர்கள். (14)



உடுவில் பிரதேச செயலகத்தால் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற ந.சுவதீபனுக்கு பிரதம விருந்தினர் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (91)





ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சர்வதேச கராத்தே தொடர்பாடல் - சென் சீ லிசிமித் பயிற்சி பற்றி விளக்க மளிப்பதையும், மாவட்டத்திலுள்ள அனைத்து பட்டி கராத் தேப் பயிற்சியாளர்களையும் படத்தில் காணலாம்.

# நிவாரணப் பெறுமதியை அதிகரிக்க கோரிக்கை

வவுனியா பிரதேசத்தில் நிவாரணத்தை நம்பி வாழும் ஏழை மக்கள் பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

தற்போது 5 பேரைக்கொண்ட ஓ குடும்பத்துக்கு ரூபா 1250 பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. 5 வருடங்களுக்கு முன்பும் இதே பெறுமதியுடைய நிவாரணப் பொருட்களே வழங்கப்பட்டன.

தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசிக்கும், வாழ்க்கைச் செலவுக்கும் ஏற்ற வகையில் வழங்கப்படும் நிவாரணத்தின் அளவை அதிகரிக்க வேண்டும் என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாப் பிரதேச நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் பெரும்பாலான மக்கள் இந்த நிவாரணத்தை நம்பி வாழ்க்கை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிராமிய வங்கியின்

# புதிர்க் கணக்குப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விபரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் விவசாய திணைக்களமும் கால்நடை, உற்பத்தி, சுகாதார திணைக்களமும் இணைந்து நடாத்திய பொருணமிய கண்காட்சியின் போது கண்காட்சியில் சேவையாற்றிய கிராமிய அபிவிருத்தி வங்கியினரின் நடமாடும் சேவையை பார்வையிட வந்த, பார்வையாளர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட புதிர்க் கணக்குப் போட்டியில் சரியான விடையை எழுதி குலுக்கல் முறை மூலம் தெரிவானோர் பெயர் விபரம் வருமாறு-

புதிர் ஒன்றில் தெரிவு செய்யப்பட்டோர்.

த.லோஜினி (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), ச.திவாகர் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ச.செந்தூரன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

புதிர் இரண்டில் தெரிவு செய்யப்பட்டோர்

செ.ஜதீசனா (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), சா.அலெக்ஸ்நோபேட் (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), வ.இலங்கைநாதன் (தருமபுரம் மகா வித்தியாலயம்)

ஆகியோரே பரிசிற்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த பரிசுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் தொடர்பு கொண்டு பரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தி வங்கியினர் கேட்டுள்ளனர். (9)





## மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி - பூநகரி கடற்தொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத்துக்கு உட்பட்ட 50 கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிக்குடா, நாச்சிக்குடா, கௌதாரிமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு பூநகரி பிரதேச தொழிற்பயிற்சி நிலையத்தில் வைத்து மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபையால் இம்மாதம் வாசிப்பு மாதமாக பிரகடனம்

கிளிநொச்சி - பூநகரி பிரதேச சபை ஒக்ரோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக பிரகடனம் செய்துள்ளது.

மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த வாரத்தில் பொதுஅறிவு பரீட்சைகளும் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இதேவேளை சனசமூக நிலையங்கள் ஊடாக மக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக பூநகரி பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

# 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்பு திட்டத்தின்கீழ் வவுனியா குறிசுட்டகுளம் முதலாவதாக புனரமைப்பு

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில், 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்புச் செய்தல் திட்டத்தின் கீழ் 20 குளங்கள் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிககை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள குறிசுட்டகுளத்தை - வேலன்குளம் விவசாய அமைப்பினரின் பெறுப்பேற்பில் கமநல கேந்திர நிலைய உதவியுடன் மிககுறுகிய காலத்தில், ஒப்பந்த அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குளம் 25 வருடமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் கீழ் இந்தக் குளம் மட்டுமே முதலாவதாக புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைவரின் தூரநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்டதுதான் கடற்புலிகள் அணி!

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை தெரிவிப்பு



விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தும் எமது தலைவர் தீர்க்க தரிசனத்தோடும், மதிநுட்பத்தோடும் இந்தப் போராட்டத்தைக் கடந்த 30 ஆண்டு காலமாக நடாத்தி வருகிறார். அவருடைய தீர்க்க தரிசனம், மதிநுட்பம் என்பன தூர நோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்டதுதான் கடற்புலிகள் அணி எனக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை- கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் நிரோஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு வெளியிடப்பட்ட 'அலை பாடும் பரணி' இறுவட்டு வெளியீட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு எங்கும் எமது மக்கள் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழமுடியவில்லை. எங்களுடைய கடல் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வேற்று நாட்டவர்களும், பெரும்பான்மை இனத்தவரும் அத்துமீறி வந்து எமது கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றனர் கடற்புலி மாவீரரின் குறிப்பிட்ட ஒரு பக்கத்தைத்தான் நாம் இன்று திறந்திருக்கின்றோம். ஏனைய பக்கங்கள் தமிழீழ தேசியத் தலைவரின் காலத்தில என்றோ ஒருநாள் திறக்கப்படும்.

கடற்பரப்பிலே காவியமான மாவீரகளின் நினைவாகவே "அலைபாடும் பரணி" உருவாக்கப்பட்டுள்ளது.

உலகத்தில் எந்தவொரு விடுதலைப் போராட்டமும் கொண்டிருக்காத ஒரு கடல் அணியை உருவாக்கி இன்று சர்வதேச ரீதியாக சம பலத்தோடு பேசுகின்ற அளவுக்கு உலகத்தினுடைய வல்லரசு என்று தம்மைக் கூறிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு சவாலாகக் கடற்புலிகள் வளர்ந்திருக்கின்றனர். இதற்கு தலைவரின் நீண்ட தூரப் பார்வையும், தீர்க்கதரிசனமும் தான் காரணமாகும்.

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள பிரதேசத்தில் வாழும் நாங்கள், எமது இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால், எமது சொந்தக்காலில் நின்று போராட்டத்தை முன் நகர்த்தவேண்டும்.

எமது தாக்குதல் தளபதியாகவும், துணைத் தளபதியாகவும் இருந்து வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் நிரோஜனின் நினைவுநாள் நிகழ்வுகளை இதுவரை காலமும் எங்களுடைய முகாம்களுக்குள்தான் நிகழ்த்தினோம். இன்றுதான் அந்த நிகழ்வை மக்களாகிய உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

தளபதிகளினுடைய நினைவுகளும சரி, கப்பல்களில் வீரச்சாவடைந்த தளபதிகள், போராளிகள் நினைவுகளும்சரி இன்றும்கூட வெளிப்படையாக உங்களுடன் முழுமையாகப் பகிர்ந்து கொள்ளமுடியாத நிலையில்தான் எங்களுடைய போராட நகர்வுகள் நகர்ந்து கொணடிருக்கின்றன.

இந்த சமாதான நேரத்திலும் அமெரிக்காவின் கப்பல் வருகையை அடுத்து இந்தியாவும் போட்டிக்கு போர்க்கப்பலை இலங்கைக் கடற்படைக்குப் பரீட்சார்த்த நடவடிக்கையாகக் கொடுத்திருக்கின்றது. இப்படிப் பல நாடுகள் போட்டிபோட்டுக் கொண்டு இலங்கையின் கடற்படையைப் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. இந்த வேளையில், எங்களுடைய போராட்டத்தில் இவர்கள் பதித்த தடங்களை என்றோ ஒருநாள அதுவும் தலைவருடைய நாள்களில் வரலாறு முழுமையாக மிகவிரைவில் வெளிவரும்.

இந்தத் தளபதி பல யுத்த முனைகளில் பல வெற்றிகளுக்கு வழி சமைத்தவர் ஆவார்.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விநியோகத்தின்போது முல்லைத தீவு கடற்பரப்பில் யுத்தங்கள தொடராகவும் ஒன்றுவிட்ட ஒருநாள் அல்லது இருநாட்களுக்கு ஒருதடவை நடநது கொண்டிருந்தது. இந்தக் கடற்சண்டைகள் எல்லாம எமது போராடடத்துக்கு வலுச்சேர்க்கின்ற நடவடிக்கையிலான சண்டையாகவே இருந்ததே தவிர, இலங்கைக் கடற்படை மீது வலிந்த தாக்குதல் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவில்லை. வலிந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கையே பருத்தித்துறை கடற்பரப்பில் நடைபெற்றதாகும்.

திருமலையிலிருந்து சென்று கொண்டிருந்த கப்பல் தொடா அணியை வழிமறித்து துறைமுக வாசலிலும், பருத்தித்துறை கடற்பரப்பிலும் கடற் கப்பல்களை தகர்த்தழித்து கட்டளை மையத்துடன் உள்ள தொடர்புகள் இல்லாதபோதும், தானே தனித்து நின்று முடிவுகளை மிக துல்லியமாக எடுத்து சண்டையை வெற்றிகரமாக நடத்திய ஒரு தாக்குதல் தளபதியாகவும், துணைத் தளபதியாகவும் நிறோஜன் செயற்பட்டு வந்தார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## காலாவதியான பொருட்கள் அழிப்பு

(கிளிநொச்சி)

நெருப்புக்காய்ச்சல் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சுகாதார வாரம் - 2 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை தேநீர்க்கடைகள், பலசரக்குக் கடைகள், பொது இடங்கள், சந்தைகள் என்பன பார்வையிடப்பட்டு காலாவதியான பொருட்கள் அழிக்கப்பட்டன. (இ)

# கிராமிய ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் றீடோ நடத்திய தொழில் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்த மூன்றாம் கட்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, இன்று மாலை 2 மணிக்கு கிளிநொச்சி பணபாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் டீசல இயந்திரம் பழுதுபார்த்தல், மரவேலை போன்ற பயிற்சிகளை பூர்த்தி செய்த 100ற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கட்டட நிர்மாணப் பணிகளை மேற கொள்பவர்களுக்கு வேண்டிய தொழிலாளர்களை கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் இனிவரும் காலங்களில் வழங்குமெனவும், கட்டட ஒப்பந்தக்காரர்கள் அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டால் அவ்வாறான பணியாளர்களைப் பெறமுடியும் எனவும் நிறுவனத்தின் பிரதம அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தில் பயிற்சியைப் பெற்று வெளியேறியவர்களுக்கு இந்த நிறுவனத்தொழில் வங்கியில் பதிவு செய்யப்பட்டு, வேலை வாய்ப்பை பெற்று கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி நிலையத்துக்கு 'வாச' என்ற அமைப்பே அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு வைத்தியசாலைகளில் அவசர சிக்ச்சை பிரிவு ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மேலும் இரு வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

· வவுனியா பொது வைத்தியசாலையிலேயே இதுவரை காலமும் அவசர சிகிச்சை பிரிவு இயங்கி வந்தது. இப்பொழுது செட்டிகுளம் மாவட்ட வைத்தியசாலை, பூவரசம்குளம் வைத்தியசாலை என்பனவற்றிலும் அவசர கிசிச்சை பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவையின் பிரதிப் பணிப் பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க*
*சொல்லின் பயன்இலாச் சொல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஒரு சிங்கள இனவாதியின் விஷக் கருத்துக்கள்!

'இடைக்கால நிர்வாக அதிகாரசபை மூலம் விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கில் தமது நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொள்ளப்போகிறார்கள். யுத்தத்தால் பெற்றுக்கொள்ள முடியாத ஈழ இராஜ்ஜியத்தை விடுதலைப் புலிகளுக்கு தெற்கில் சில ஏமாற்று அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து வழங்குவதற்குத் தயாராகி வருகிறார்கள்.'

இவ்வாறு இனவெறித்தனமான மொழியில் கருத்து வெளியிட்டிருப்பவர் வேறு யாருமல்ல பௌத்த சிங்கள மக்களின் பாதுகாவலராக, சிங்களத் தேசத்தின் இரட்சகராகத் தன்னை இனங்காட்ட பல்தந்திரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்ற பேரினவாத சிந்தனையாளரான எஸ்.எல்.குணசேகராவேதான்.

பௌத்த சிங்களப் பேரினவாதக் கருத்துக்களையே தமது அரசியல் கோட்பாடுகளாகக் கொண்டு தென்பகுதிச் சிங்கள மக்களிடையே தமிழ்மக்களின் அரசியல் உரிமைப்போராட்டத்துக்கு தமிழ் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அவதூறுகளையும், நச்சுக்கருத்துக்களையும் விதைப்பதையே இலக்காகக் கொண்டியங்கும் அரசியல்வாதிகளிடையே எஸ்.எல்.குணசேகரா மிக முக்கியமானவர்.

பண்டாரநாயக்க, ஆர்.ஜி.சேனநாயக்க, கே.எஸ்.பி.ராஜரத்னா, சிறில் மத்தியு, நெவில் பெர்னாண்டோ, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, திலக் கருணாரத்ன, சம்பிக்க ரணவக்க என நீண்டு தொடரும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் பரம்பரையில் எஸ்.எல்.குணசேகராவுக்கும் முக்கிய இடமுண்டு.

கடந்த காலங்களில் அவரின் அரசியல் முன்னெடுப்புக்கள் யாவும் தமிழ்மக்களது உரிமைப்போராட்டத்தை கொச்சைப்படுத்துவதையும், அது பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற கருத்தியல் கற்பிதங்களை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டதாகவே இருந்து வந்துள்ளன.

அண்மைக்காலங்களில் இவர் எழுதி வெளியிட்டுள்ள சிங்கள மற்றும் ஆங்கில மொழியிலான பல நூல்கள் அப்பட்டமான வகுப்புவாதத்தை தூண்டிவிடும் தன்மையைக் கொண்டவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆளும் கட்சிகளுடன் ஒட்டிக்கொண்டு அரசியல் நடத்திய போதிலும், இவரது இனவாதக் கருத்துக்களை மேலும் தீவிரமாக வெளிப்படுத்த அக்கட்சிகளின் பம்மாத்து அரசியல் நோக்கங்கள் இடமளிக்காததால், இவற்றிலிருந்து விலகி பௌத்த சிங்களத் தேசத்துக்காகவும், மக்களுக்காகவும் உழைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு திலக் கருணாரத்ன, சம்பிக்க ரணவக்க போன்ற வரண்ட பேரினவாதிகளுடன் இணைந்து சிஹல உறுமய என்ற சிங்களக் கட்சியைத் தோற்றுவித்தார்.

அந்தக் கட்சியின் அரசியல் கோட்பாடு பச்சை இனவாதக் கொள்கைளை அடிப்படையாகக் கொண்டதேயாகும். தமிழ் மக்களின் உரிமைகளை நிராகரித்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தொடரவேண்டுமென்பதையே சிஹல உறுமய இலட்சியமாகக் கொண்டிருந்தது.

பௌத்த சிங்கள மக்களின் தர்மராஜ்ஜியத்தை விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் உருவாக்கப்போகின்றோம் என பெருமெடுப்பில் பிரகடனம் செய்துகொண்டு 'தலைகீழாக நானேற்றிய வில்'லைத் தமது தேர்தல் சின்னமாக அறிவித்த படி அரசியலில் குதித்த சிஹல உறுமயவுக்கு சிங்கள பௌத்த மக்கள் கொடுத்த வரவேற்பு அவர்களை முற்றாக உதாசீனப் படுத்தும் வகையிலேயே அமைந்தது.

இது எஸ்.எல்.குணசேகரா கும்பல் எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

நாடளாவிய மொத்தமாகக் கிடைத்த வாக்குவீதத்தின் அடிப்படையில் கிடைத்த போனஸ் உறுப்புரிமையைப் பயன்படுத்த குணசேகரா நாடாளுமன்ற இருக்கையை பெற்றபோதும், அதில் அதிககாலம் அவரால் இருக்கமுடியவில்லை. அவரை இருக்க பௌத்த சிங்கள கடும்போக்காளர்கள் அனுமதிக்கவில்லை.

அவர் பௌத்த சிங்களவரல்ல கிறிஸ்தவ சிங்களவர் எனக் கூறி அவரது ஆட்களே அவரை விமர்சிக்க அவர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டியதாயிற்று.

பேரினவாதியை - தூய கடும்போக்குப் பேரினவாதிகள் தூக்கியெறிந்தனர்.

ஆனால், அப்போதுகூட குணசேகராவுக்கு சித்தம் தெளிவு பெறவில்லை. அவ்வப்போது பேரினவாதத்தை ஊக்குவித்து வியாபாரம் செய்யும் ஆங்கில - சிங்கள ஊடகங்களுக்குத் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கட்டுரைகளை எழுதுதல் - புத்தகங்களை வெளியிடுதல், இனவெறியைத் தூண்டும் கற்பிதக் கருத்துக்களை உள்ளடக்கிய உரைகளை நிகழ்த்தல், அறிக்கைகளை வெளியிடுதல் ஆகியவற்றின் மூலம் தனது அரசியல் இருப்பினை வெளிப்படுத்த தவறுவது கிடையாது.

இதன் அடிப்படையிலானதே அவரது மேற்குறிப்பிட்ட கருத்தாகும்.

போரில் தோல்வி தொடர்ந்து சிங்கள இராணுவம் வீழ்ச்சி கண்டவேளையில்தான் இன்றைய சமாதான சூழலை ஏற்படுத்த அரசு முன்வந்தது என்ற வரலாற்று உண்மையை மறந்து போரில் வெல்ல முடியாத தமிழ் ஈழத்தை, ஈழஇராஜ்ஜியத்தை சமாதான மேசையில் சிங்கள ஏமாற்றுக்கார அரசியல்வாதிகள் மூலம் பெற முயல்வதாகப் புலம்பியுள்ளார் குணசேகரா.

இன்றைய சமாதானத்தாலும், பேச்சுவார்த்தையாலும் இதுவரை பயன்பெற்றது பௌத்த சிங்கள அரசும், மக்களுமே அன்றி விடுதலைப் புலிகளோ, தமிழ்மக்களோ அல்ல என்பதை குணசேகரா புரிந்துகொள்வது நல்லது.

தமிழீழ வெல்லப்படவேண்டிய ஒன்றேயொழிய யாசகமாக எவரிடத்தும் கொள்ளப்படவேண்டிய ஒன்றல்ல என்பது தமிழ் மக்களுக்கும், புலிகளுக்கும் நன்கு தெரியும். எனவே, தமிழ் மக்கள் குணசேகராவின் புலம்பல் குறித்து அக்கறை கொள்ளப்போவது கிடையாது. ஆனால், சிங்கள மக்கள் அவரது புலம்பலுக்கு செவிசாய்த்தால் பாதிப்பு அவர்களுக்கு மட்டுமே....

## நாடும் நடப்பும்




பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஆறு வாரகாலத்தில் நாடாளுமன்றில் வரவு – செலவுத் திட்டம் தாக்கல்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் ஆறுவாரகாலத்தினுள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் ஈ.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தேசிய அபிவிருத்தியை இலக்கு வைப்பதற்காகவே இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்திருக்கும். உட் கட்டமைப்பு வசதிகள், சிறிய நடுத்தர கைத்தொழில்கள் குறித்து இதில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கும்.

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு கட்டாயமானது. இதில் மாற்றமேதுமில்லை. கொடுப்பனவுகள் எவ்வளவால் அதிகரிக்கப்படுமென்பது இரகசியமாகவே பேணப்படும்.

அடுத்த வரவு - செலவுத் திட்டம் குறித்துத் தத்தமது கருத்துக்களை முன்வைக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கருத்துக்கு அதிக வரவேற்புக் கிடைத்திருந்தது.

இலங்கை எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினையைத் தீர்க்க, பல மத்திய கிழக்கு நாடுகள் முன்வந்துள்ளன. ஈரான் முதலான நாடுகள் - இலங்கைக்கு வழங்கும் எரிபொருளுக்கான பணத்தொகையைக் காலம் தாழ்த்தி வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளன. இவை இலங்கையில் எரிபொருள் விலையேற்றத்தைக் குறைக்க உதவும் என அவர் மேலும் தெரிவித்தார்,

## கல்வியங்காடு தபாலகத்தை தரமுயர்த்தக் கோரிக்கை!

கல்வியங்காடு சந்தைக்கு அருகிலுள்ள தபாலகத்தைத் தரமுயர்த்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் பல வருடங்களாகக் கோரிவருகின்ற போதிலும், இதுவரையும் எதுவித மாற்றமும் ஏற்படாததையிட்டு அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சியிலிருந்த காலம் முதல், தபால்மா அதிபர், தொலைத்தொடர்பு அமைசசர் மற்றும் பிராந்திய தபால் அதிபர் உட்படப் பல தரப்பினரிடமும் இந்தத் தபாலகத்தைத் தரமுயர்த்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மக்கள் அடர்த்தி கூடிய அந்தப் பகுதியில்- தனியானதொரு அஞ்சல் சேவை அவசியம் என்பதால், அப்பகுதியில் இயங்கும் உபஅஞ்சல் அலுவலகத்தைத் தரமுயர்த்துதல் அவசியமென அந்தப் பகுதிமக்கள் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

## எரிபொருள் கொடுப்பனவை குறைப்பதற்குத் தீர்மானம்

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டு வரும் எரிபொருளுக்கான மாதாந்தக் கொடுப்பனவான 90 ஆயிரம் ரூபாவை 56 ஆயிரமாக குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவால் அனைத்து அமைச்சர்களுக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் விலைகள் உயர்ந்து செல்வதால், அவற்றுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டி ஏற்பட் டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில இது குறித்து தீர்க்கமாகத் தெரியப்படுத்தப்பட்டது. இதன்படி அமைச்சர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு கிடைக்கக் கூடிய அதிகூடிய எரிபொருளின் அளவு 800 லீற்றர் ஆகும்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் காடையர்களும், மாபியாக்களும்!

## ஜே.வி.பி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

காடையர்களையும் மாபியாக்களையும் உள்ளடக்கியதே சுதந்திரக் கட்சி என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார் ஜே.வி.பி. அமைச்சர் கே.டி.லால்கந்த.

தொழிலமைச்சு மற்றும் தொழிலாளர் யூனியனுக்குப் பொறுப்பாகவுள்ள இந்த ஜே.வி.பி. அமைச்சர், சுதந்திரக் கட்சியின் தூண்டுதலில், இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நிலைப்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும், இதை நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்காதவிடத்து, கூட்டணியிலிருந்து விலகவும், அரசைக் கவிழ்க்கவும் தாம் பின்னிற்கப் போவதில்லை என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.

நாங்களே தொழிலாளர் ஐக்கியத்தைப் பேணுகிறோம், நாமே நாட்டை ஆளுகிறோம், நம்மிடமே ஆளும் கட்சியின் அதிகாரமும் பலமும் இருக்கிறது என்று சவால் விடுத்துள்ள ஜே.வி.பி.அமைச்சர், இதுவரை ஜே.வி.பி. முன்னெடுத்த இரு தொழிலாளர் யூனியன் வேலைநிறுத்தங்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் தலைமையும் தங்களது கருத்தை ஏற்றுக்கொள்ளாது செயற்பட்டால், கடும் பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தாயகம் திரும்பியோருக்கு தொழில் உபகரணங்கள்

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பி, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து தொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி 2004 ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்பு வந்தவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான உதவியை ஐ.ஓ.எம் நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

இதற்கு முன்னர் யு.என்.எச்.சி.ஆரின் ஏற்பாட்டில் தனிப் படகுகளின் மூலமும், தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் விபரம் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும், இந்த விபரங்களின்படி நல்லூர் பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு விரைவில் இவ்வாறான உதவிகளை வழங்கவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

உலக அஞ்சல் தினம் ஒக்ரோபர் - 9

கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்




# நவீன மயமாகி வரும் அஞ்சல் சேவை

உலகவாழ் மக்களுக்கு மிக நெருங்கிய பங்களிப்பைத் தபால் சேவை செய்து வருகிறது. இதனை மேலும் உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 9 ஆம் திகதி "உலக தபால் தினம்" கொண்டாடப்படுகிறது.

இலங்கைத் தபால சேவை 130 வருடங்களுக்கு முன்பு முன்னோடியாக இருந்த உலக தபால் சங்கத்தின மூலம் விரிவுபடுத்தப்படவுள்ளது. எதிர்கால தபால் சேவையை விரிவுபடுத்தும் வகையிலே இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு இடத்திலும் தபால் சேவையின மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொளளமுடியும். இது இன்று உலக நாடுகளில் நல்லதொரு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தபால் சேவை மக்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது. இதனைப் பயனபடுததி அதனை விரிவுபடுத்த வேண்டும்.

தேசிய மட்டத்தில் வங்கி நடவடிககைகள், காப்புறுதி, பணம் சேகரிப்பு, பணம் வழங்கல், தகவல் தொழில் நுட்பத்துறைச் சேவை,மற்றும் நடவடிக்கைத் திட்டங்கள் இலங்கை தபால் சேவையின மூலம் மிகஅவசிய தேவையாக இலேசாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் தபால் சேவை, தொடர்பாடல், செய்திப் பரிவர்த்தனை ஆகியவற்றின் ஆரம்பம், தோற்றம் பற்றிப் பார்ப்போம்.

உலகத்தில் உயிரினங்கள் தோனறிய காலத்திலிருந்து - தொடர்பாடலும் ஏதோ ஒரு வகையில் ஆரம்பித்துவிட்டது. முதல் மனிதன் ஆதாமுக குப்பின் கூட்டம் கூட்டமாக வாழ ஆரம்பித்த மனிதர்கள், இடம்பெயராமல் இருந்ததால் செய்திப் பரிமாற்றத்தைப் பற்றி சிந்திக்கவில்லை. கற்கால மனிதனுக்கு வேட்டையாடிப் பிழைப்பதில் வெறுப்பு ஏற்பட்டபோது, புதிய தொழில் நாட்டம் உண்டாயிற்று. புலாலை மட்டும் உணவாக உண்டமனிதன் காய் கனிகளை உண்ண ஆரம்பித்த போது, அவனுக்கு விவசாயம் செய்வதில் நாட்டம் ஏற்பட்டது. செழிப்பான, நீர் வசதியுள்ள இடங்களைத் தேடிச் சென்று பயிர் செய்யவேண்டியிருந்தது. இதனால் நீண்டகாலம் தொலைவிடத்தில் குடும்பத்தினரைப் பிரிந்திருக்கும் நிலை மனிதனுக்கு ஏற்பட்டது. அதனால் செய்திப் பரிவர்த்தனை அவசியமாகியது.

ஆரம்பத்தில் செய்திப் பரிவர்த்தனைக்கு மனிதன் புகையையே பயன்படுத்தினான். காலப்போக்கில் கூக்குரலிடுதல், தோல் கருவிகளின் மூலம் ஒலி எழுப்புதல், அம்பின் துணைகொண்டு செய்தி அனுப்புதல் போன்ற உத்திகளைப் பயனபடுத்தினான். மனித சமுதாயத்தில் கல்வி அபிவிருத்தி ஏற்பட, புதிய புதிய முறைகள் செய்திப் பரிவர்த்தனையில் கையாளப்பட்டன. பணபலம், அதிகாரபலம் படைத்தோர் அடிமைகள் மூலம் செய்திகளைப் பரிமாறினர். பழக்கப்பட்ட பிராணிகளும், பறவைகளும் செய்திப் பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்பட்டன. கடல் கடந்த செய்திகளை அனுப்புவதற்குப் புறாக்களைப் பயன்படுத்தினார்கள்.

கிறிஸ்து வருடம் 1500ஆம் ஆண்டளவில் கால்நடைச் செய்தித் தூதுவரகள் பெருமளவில் பயன் படுத்தப்பட்டனர. இந்தச் சேவைக்கு வலிமை பொருந்திய முரட்டு மனிதர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். காடு, மலை, பள்ளத்தாக்குகள், ஆறுகள் ஆகியவற்றைத் தாண்டிச் சென்று செய்தி கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு இவர்களுக்கிருந்தது. இந்தக் காலப் பகுதியில் அஞ்சல் பரிவர்த்தனை அரச குடும்ப மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும், திருச்சபைகளின் மட்டத்திலும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அவர்களுக்கென்று தனியான தூதுவர்கள் இருந்தார்கள்.

பிற்காலத்தில் மனிதன் மூலம் செய்தி அனுப்பும் முறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. செய்தி சென்றடைய வேண்டிய தூரம் முழுவதற்கும் ஒரு மனிதனையையே பயன்படுத்தாமல், பல மனிதர்கள் மூலம் இடத்துக்கிடம் செய்திகள் அனுப்பிவைக்கப்பட்டன. இந்தமுறை மூலமே - இன்றும் தபால் பைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு இடத்துக்கிடம் தபாற் பைகளைக் கொண்டு செல்பவர்கள் தபாலோடிகள் (POSTAL RUNNERS) என அழைக்கப்படுகின்றனர்.

இலங்கையில் 1804 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 ஆம் ஆண்டுவரை அஞ்சல் அதிபதிகளாகப் பதவி வகித்த கப்டன் ஏ.கென்டி, அந்தனி பேத்தாச்சி ஆகியோர் நிர்வாக மட்டத்திலான செய்திப்பரிவத் தனைக்காக 1798 ஆம் ஆண்டில் கொழுமபு, காலி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய ஐந்து நகரங்களில் காரியாலயங்கள் திறக்கப்பட்டன. 1804 ஆம் ஆண்டு தொடக்கம் 1817 ஆம் ஆண்டுவரை அஞ்சல் அதிபதியாகவிருந்த ஈ.பினாட்டமன் என்பவரே இந்த நாட்டின் முறைசார்ந்த அஞ்சல் சேவைகளின் அபிவிருத்திக்கு வித்திட்டவர் எனலாம். கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலிருந்த காரியாலயங்கள் 1815 ஆம் ஆண்டில் இவரால் அஞ்சல் அலுவலகங்களாக மாற்றப்பட்டதுடன் மாத்தறையிலும் அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது. அவற்றைப் பொதுமக்களும் பயன்படுத்த முடிந்தது.

1913 ஆம் ஆண்டு தொடக்கம் 1923 ஆம் ஆண்டுவரை அஞ்சல் அதிபதியாகப் பதவிதத்த எவ். ஜே.சிமித் என்பவர் 1921 ஆம் ஆண்டில் திவுலப்பிட்டியா, அக்மீமன, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாபத்துறை ஆகிய ஆறு இடங்களில் முதன் முதலாக உப அஞ்சல் அலுவலகங்களை நிறுவினார். இவ்வாறு காலத்துக்குக் காலம் அஞ்சல் சேவை வளர்ச்சிகண்டு வந்திருக்கிறது.

இலங்கை அஞ்சல் சேவை மக்களுக்கு வழங்கும் பாரம்பரிய சேவைகளுடன் காலத்துக்கு ஏற்ற நவீன சேவைகள் அறிமுகப்படுத்தப்படடுள்ளன. ரெலிமெயில் சேவை, தபால் தொலைநகல் சேவை, தொலைநகல் காசுக்கட்டளைச் சேவை, விரைவு தபால் சேவை, சர்வதேச மிக விரைவு தபால் சேவைகளைப் பொதுமக்கள் பெறமுடிகிறது. வாடிக்கையாளரின் நன்மை கருதி, அன்றாடத் தேவைகளை உணர்ந்து அஞ்சல் அலுவலகங்களில் தொடரபு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அஞ்சல் சேவையுடன் தங்களுக்குத் தேவையான சேவைகளையும் மக்கள் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சேவைகளை, தேவைகளை மாநகர நகரப் பகுதிகளிலுள்ள மக்கள் பெற்றுக் கொண்டாலும், இந்தச் சேவைகள் பட்டின கிராமப் புறங்களுக்கு இன்னமும் விஸ்தரிக்கப்படவில்லை. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அஞ்சல் சேவை முற்றாகச் சீர்குலைந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன் ஒரு சாதாரண கடிதம் அஞ்சலில் இட்டு ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குப் பின்னரே முகவரியாளர் கைக்கெட்டும் நிலை இருந்தது. கடந்த 20ஆண்டு போர் அனர்த்தம் காரணமாக அஞ்சல் அலுவலகங்கள், உபஅஞ்சல் அலுவலகங்கள் அழிக்கப்பட்டதுடன் அலுவலக தளபாடங்கள், பொருட்களும் முற்றாக அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் இன்னமும் திருத்தி அமைக்கப் படவில்லை. அடிப்படை வசதிகளற்ற சிறிய கடைக் கட்டடங்களிலேயே அஞ்சல் அவுலகங்கள் தளபாடங்கள் அற்ற நிலையிலேயே இயங்குகின்றன. அஞ்சலதிபர் தரம் I அஞ்சலதிபர் தரம் II அஞ்சலதிபர் பதவி வெற்றிடங்களுள்ளன. அஞ்சல் அலுவகங்கள் உபஅஞ்சல் அலுவலகங்களில் கோலவுடைப் பணியாளர்கள் வெற்றிடங்கள் நிறையவே உண்டு. மேற்குறிப்பிட்ட தேவைகள் பூரணமாகப் பூர்த்தி செய்யப் படும் போதுதான் உலக மக்களுடன் சேர்ந்த அக்ரோபர் 9இல் உலக அஞ்சல் தினத்தை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களும் கொண்டாட முடியும். இது அரசினதும், அஞ்சல் திணைக்களத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இருநூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த அஞ்சல் திணைக்களம் 580 அஞ்சல் அலுவலகங்கள், 3450 உபஅஞ்சல் அலுவலகங்கள், 310 முகவர் அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட பரந்த அஞ்சல் வலைப்பின்னல் ஊடாக இலங்கை மக்களுக்கு அஞ்சல் சேவையை ஆற்றி வருகிறது. அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 22,000க்கு மேற்பட்ட அஞ்சல் பணியாளர்கள் உலக அஞ்சல் குடும்பத்தில் இணைந்து செயற்படும் 6.2 மில்லியன் அஞ்சல் பணியாளர் களுடன் இணைந்து சிறந்த அஞ்சல் சேவையாற்ற வேண்டும். அதனையே உலகம் பூராவும் உள்ள மக்களும் விரும்புகிறார்கள்.

---

# அஞ்சல் சேவையில் பழமை வாதம் களையப்பட வேண்டும்...!

அஞ்சல் சேவையின் மகத்துவம பற்றி உலகில் அறியாதவர்கள் மிகச சிலராகத்தான் இருக்க முடியும். குக் கிராமங்களிலும், ஒற்றையடிப் பாதைகளிலும், யானைக் காடுகளிலும், மலையேற்றப் பகுதிகளிலும் தினமும் செலலக்கூடிய ஒருவராக அஞ்சலர் இருக்கினறார். அதன் காரணமாகவே வெளியுலகததுடன் மக்களை இணைக்கின்ற பாலமாக அவர் திகழ்கின்றார். அஞ்சலுக்கு மாற்றடு இல்லையென்பது உண்மை. அது மட்டுமல்ல, "எல்லோருக்கும் எப்போதும் அஞ்சல் சேவை" என்பதே அஞ்சல் திணைக்களத்தின் மகுட வாசகமாகும். இந்த அற்புத சிந்தனையை உலக அஞ்சல் தினமாகிய இன்று நினைவு கூருவது சாலச்சிறந்தது.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அஞ்சல் சேவை இலங்கை மக்களுக்கும் சிறந்த சேவையாற்றி வருகின்றது. மக்களுடன் மிக நெருங்கிய உறவை அஞ்சல் சேவை கொண்டுள்ளது. புதிய சமூக மாற்றத்துக்கு ஏற்ற வகையிலும், சர்வதேச உலகமயமாக்கலுக்கு ஏற்ற வழியிலும், எமது தபால் சேவை நவீனமயப்படுத்தப்பட வேண்டியதும், துரிதப்படுத்தப்பட வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும். அஞ்சல் சேவை ஓர் அத்தியாவசிய சேவை.

இந்தச் சேவையின் முழுப்பலனகளையும் இந்த நாட்டு மக்கள்நன்கு அனுபவித்து வருகின்றார்கள்.

உலகம் சுருங்கி புதிய தொழில் நுட்பங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. குறுகிய வட்டத்துள் இருந்த அஞ்சல் சேவை இன்று அகலமாக, ஆழமாக விரிவுபடுத்தப்பட்டு உயரிய இடத்திலிருப்பது மிக மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். இருநூறு வருடங்கள் பழைமைவாய்ந்த எமது தபால் சேவை மிகவும் தரம் மிக்கதும், தனித்துவம் மிக்கதுமான அதேவேளை, துரிதமானதும், துர்திஷ்டம் மிக்கதுமான தபால் சேவையாக மாற்றுவதே எமது அளப்பரிய பணியாகும். தற்போது தபாற் சேவை பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. நவீனத்துவம் வாய்ந்த விஞ்ஞான விந்தைகள் நிறைந்த இன்றைய உலகில் அஞ்சலுக்குப் சவால் ஏறபட்டுள்ளது. இருப்பினும் அஞ்சலின் தரம் குறையவில்லை என்றும் நாம் பேணும இரகசியத் தன்மை எமது தபாலுக்கு முதன்மையைத் தருகின்றது, முக்கியத்துவத்தை அளிக்கின்றது.

மக்கள் மத்தியில் தபாற்சேவைகககு இருக்கும் மகத்துவம் காப்பாற்றப்பட வேண்டுமானால், நாம் புதிய விஞ்ஞான ரீதியிலான தேடுதல்களின் மூலம் புதிய யுக்திகளைக் கையாண்டு, அஞ்சல் சேவையை மேம்படுத்த வேண்டும். இன்று நகர்ப்புறங்களில் சகல வசதிகளுடன் கூடிய தபாலகங்கள் உண்டு. ஆனால் கிராமப்புறங்களில் இந்த வசதிகிடையாது. சகல வசதிகளும் கிராமப் புறங்களுக்கும் கிடைக்கவேண்டும். இதில்தான் அஞ்சலின் வெற்றி தங்கியுள்ளது. இதற்கு அரிய உயரிய புதிய தொழில் நுட்பங்களும், ஊழியர்களின் அர்ப்பணிப்புடனான ஆக்கபூர்வமான சேவையும் மிகமிக அவசியமாகும்.

ஆசியாவிலேயே மிகச்சிறந்த அஞ்சல் சேவை எனப் போற்றப்பட்ட நமது அஞ்சல் சேவை இன்று சற்றுத் தளர்ந்திருப்பது என்னவோ உண்மை தான். முதல்நாள் இரவு 7.30 மணிக்கு கொழும்பில் போடப்பட்ட கடிதம் அடுத்தநாள் காலை 7.00 மணிக்கு பருத்தித்துறையில் விநியோகிக்கப்பட்ட நாட்களை நாம் நினைததுப் பார்க்கின்றோம். இன்று அந்த வசதியில்லை. நாட்டிலேற்பட்ட குழப்ப சூழநிலையால்தான் இந்தநிலை ஏற்பட்டது. இருப்பினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அஞ்சல் சேவை திறம்பட நடக்கின்றது என்பது வெளிபடை.

ஒக்ரோபர் 9ஆம் திகதி தோறறுவிக்கப்பட்ட அஞ்சல் சங்கம் 189 நாடுகளைக் கொண்டதாக தற்போது அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. மிகப் பெரிய அஞ்சல் வலையைப் பின்மூலம் உலக நாடுகளை ஒன்றுபடுத்தி, உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, அஞ்சல் சேவையை விரிவுபடுத்தி, விரைவுபடுத்துவதற்கு அது தன்னாலான முயற்சிகளைச் செய்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் இடையில் விஞ்ஞான தொழிலநுட்ப ரீதியிலான வேறுபாடுகள் காணப்பட்டாலும், உலக சனத்தொகையில் பெரும் பகுதி பௌதீக தபால் சேவையை (Ordinary Mail Service) நமபியிருக்கிறது. அஞ்சலின் தேவை வருடாவருடம் கூடிக்கொண்டே போகின்றது. இந்த அஞ்சல் சேவை இல்லையேல் தகவல்கள், கல்விச் சேவைகள், இலக்கியம், கலை என்பவற்றில் உரிய கோட்பாடுகளின் பரிமாற்றம் மிகவும் சீரழிந்துவிடக் கூடும், சமூக ரீதியிலான சில சிக்கல் களையும் உருவாக்கக் கூடும்.

அஞ்சலுக்குத் தடையாகவுள்ள சகல விடயங்களையும் ஆராய்ந்த மொன்ட்கொமறி பிளார் (Mont Gomery Blair) 1863 ஆம் ஆண்டில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். இருப்பினும் அது வெற்றியளிக்காததால ஐக்கிய வட ஜேர்மனியின் தபால் நிர்வாகத்தில் உயரியவராகக் கருதபபட்ட ஹென்றிச் வொன் ஸ்டீபன் (Henrich Von Stephen) என்பவர் 1874 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம 15 ஆம் திகதி ஒரு மாநாட்டைக் கூட்டினார். அதில் 22 நாடுகள் பங்கு பற்றின. அதன்படி அஞ்சல் சேவையின் அவசியம்பற்றி ஆராய்ந்து ஒக்ரோபர் 9 ஆம் திகதி 1978 ஆம் ஆண்டில் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஒக்ரோபர் 9ஆம் திகதி சர்வதேச அஞ்சல் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## சங்கத்தின் முக்கிய வரலாற்று சம்பவங்கள்

*1. 1840 ஆம் ஆண்டு - சேர் றோலன்ட் ஹில் (Sir Roland Hill) முத்திரையைக் கண்டுபிடித்தவர் தலைமையில் முதலாவது அஞ்சல் புரனமைப்பு இடம் பெற்றது.*

*2. 1878 ஆம் ஆண்டு - பொது அஞ்சல் சங்கம் என்பது, அகிலதேச அஞ்சல் சங்கம் எனப் பெயர் மாற்றப் பட்டது.*

*3. 1948 ஆம் ஆண்டு - அ.தே. அ.ச. ஐக்கிய நாடுகள் சபையின் விசேட முகவராக நியமிக்கப்பட்டது. இதனால் UNDP வழியாக சர்வதேச உதவிகளை அஞ்சல் நிர்வாகங்கள் பெற முடிந்தது.*

*4. 1970 ஆம் ஆண்டு - அ.தே. அ.ச. இன் தலைமையகம் மூறி (Muri) இன் புறநகர்ப் பகுதியான பேர்ண் எனும் தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டது.*

## இந்தச் சங்கத்தின் சிறப்பான பணிகள் பின்வருமாறு.

*1. உலக அஞ்சல் சேவையைக் கணகாணித்தல்.*

*2. அஞ்சல் சேவையை அபிவிருத்தி செய்ய உதவுதல்.*

*3. அஞ்சல் நிர்வாகங்களுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் களைதல்.*

*4. அஞ்சல் அதிகாரசபைக்கு ஆலோசனைகளை வழங்குதல்.*

*5. தற்கால நடைமுறை வழிகளைப் பற்றி ஆராய்தல்.*

*6. புதிய வழிமுறைகளைப் புகுத்தி சேவையை நவீனமயப்படுத்தல் என்பனவாகும்.*

சங்கத்தின் சின்னம் 1909-09-04 அன்று பிரான்ஸ் தேசத்து சிறப்பியான றெனே - டீ - செயின்ட் (Rene De Saint) என்பவரால் உருவாக்கப்பட்டது. அதிலுள்ள ஐந்து பெண்களும் ஐந்து கண்டங்களையும் குறிப்பதோடு அவர்கள் அகில உலகத்தையும் சுற்றி அஞ்சல்களைப் பரிமாறுவதாகக காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான தபால் சேவை சிறநததாக விளங்கினாலும், யாழ்குடா நாட்டு தபாற்சேவை மகிழ்ச்சிக்குரியதாகக் கடநத காலங்களில் இருக்கவில்லை. இருப்பினும் படிப்படியான வளர்ச்சி வீதம இங்கு காணப்படுகிறது. தற்போது குடாநாட்டில் 30 அஞ்சலகங்கள், 147 உப அஞ்சலகங்கள், 18 முகவர் அஞ்சலகங்கள் மூலமாக சேவை சிறப்பாக நடைபெறுகிறது. காசுக்கட்டளைப் பொருளாதாரம் (Money Order Economy) நிலவிய குடாநாட்டில் இன்று காசுக் கட்டளை மிகவும் குறைந்துவிட்டது. இதற்கு வங்கிகளும் ஒரு காரணமாகும். இருப்பினும் கிராமங்களின் எல்லைகளைத் தொடக்கூடிய ஆற்றல் தபாற்சேவைக்கு மட்டுமேயுண்டு என்பதை எவரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

புரையோடிப்போன சட்டதிட்டங்களை மாற்றி, காலனித்துவ வாதிகளால் உருவாக்கப்பட்ட விதிகளை அகற்றி, பல புதுமைகளைச் செய்ய வேண்டும். வடமாகாண அஞ்சல் சேவைக்குப் புத்துயிர் ஊட்டுதல் என்பது மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்படல் எனப் பொருள் பட வேண்டும். காலத்துக்கு ஒவவாத விதிமுறைகளை ஞாலத்தில் அழித்திடல் அவசியம். பாரதி சொன்னான் சந்திர மண்டலத் தில் காலடி வைக்க வேண்டும் என்று. இன்று செயற்கைக் கோள் மூலம் செய்திப்பரிமாற்றம் நடக்கிறது.

பழமைவாதம் களையப்பட வேண்டும். அதேவேளை, கலாசார விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். அந்த வகையில் அயராத முயற்சியும், தளராததுணிவும் கொண்டு, இந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகளை வெற்றியடையச் செய்ய முனைவோம்.

சம்பந்தர் சிவராஜசிங்கம்

## இஸ்ரேலின் எல்லைப்பகுதியிலுள்ள

# எகிப்தின் மிகப்பெரிய ஹோட்டல் மீது கார்க்குண்டுத் தாக்குதலில் 25 பேர் பலி!



இஸ்ரேலை அண்டிய எகிப்தின் எல்லைப் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் மீதும் மற்றும் ஒரு இடத்திலும் நடந்த மூன்று வெடிகுண்டுத் தாக்குதல்களில் 25 பேர் கொல்லப்பட்டதுடன், 122 பேர் காயமடைந்தனர்.

எகிப்தின் தாபா பகுதியில் அமைநதுள்ள மிகப்பெரிய ஹில்டன் ஹோட்டல் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், 23 பேர் கொல்லப்பட்டனர். அடுத்து நுவெம்பா என்ற பிரதேசத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

ஹோட்டல் மீதான தாக்குதல் கார்க்குண்டு மூலமாக நடத்தப்பட்டதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் மற்றும் எகிப்து நாட்டுப் பிரஜைகளே பெருமளவில் கொல்லப்பட்டதாகவும், பிரிட்டன் மற்றும் ரஷ்ய நாட்டுப் பிரஜைகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலினால் ஹோட்டலின் பத்து மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்தது. இஸ்ரேலின் மீட்புப் பணியாளர்கள் எல்லைப் பகுதியைக் கடந்து புல்டோசர்கள் மற்றும் பாரம் தூக்கிகள் சகிதம் குண்டு வெடித்த ஹோட்டல் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களில் பலர் உயிருடன் இருக்கலாமென தாம் நம்புவதாக இஸ்ரேல் இராணுவ அதிகாரியான யாயிர் நவீ தெரிவித்தார்.

இந்தத்தாக்குதலை அல்கொய்டா அமைப்பினர் அல்லது அவர்களுடன் தொடர்புடைய வேறொரு பிரிவினர் நடத்தியிருக்க வேண்டுமென இஸரேலின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சீவ் பொயிம் தெரிவித்தார்.

இந்தத்தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என, பலஸ்தீனத்தின் ஹமாஸ் மற்றும் ஜிகாத் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

1997 ஆம் ஆண்டு எகிப்தின் லக்ஸர் என்ற இடத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கோரமான முறையில் 58 உல்லாசப் பயணிகள் வெட்டியும், சுட்டும் கொலை செய்யப்பட்ட பின்னர் தற்போது, இந்த மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட ஹோட்டல் பகுதி இஸ்ரேலுக்கும், எகிப்துக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதையாகும். தற்போதைய விடுமுறைக்காக பெருமளவு இஸ்ரேலியர்கள் இந்தக் ஹோட்டலுக்கு சென்று தமது பொழுதைக் கழித்தனர்.

இந்தத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேலியர்களை உடனடியாக நாடு திரும்புமாறு, இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனையடுத்து நூற்றுக் கணக்கான இஸ்ரேலியர்கள் பெரும் சோகத்துடன் எகிப்திலிருந்து இஸ்ரேலுக்குச் சென்றுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

## ஆப்கான் தலைநகர் மீது றொக்கட் தாக்குதல்!



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில், நேற்று ஆப்கானிஸ்தான் நகர் காபூலில் றொக்கட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமெரிக்க மற்றும் ஜேர்மன் தூதரகங்கள் அமைந்துள்ள பகுதியிலேயே ரொக்கட் வீழ்ந்து வெடித்துள்ளதாகவும், ஆனால், எவரும் காயமடையவில்லை எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று இடம்பெறவுள்ள தேர்தலைக் குழப்பும் முகமாகவே இந்தத தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்த ஆப்கானிஸ்தான் அரசாங்கம், இருந்தபோதும் இந்த தாக்குதல் சம்பவமானது இன்றைய தேர்தல் வாக்களிப்புக்களை எந்த விதத்திலும் பாதிக்காது எனத் தெரிவித்துள்ளது.

இன்று இடம்பெறவுள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவின் ஆதரவாளரான தற்போதைய ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் உட்பட 18 பேர் போட்டியிடுகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் 18 ஆயிரம் அமெரிக்கக் கூட்டுப்படைகள் நிலைகொண்டுள்ளபோதிலும், 9 ஆயிரம் நேட்டோ துருப்பினர் ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

## பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தில் குண்டு வெடித்து 10 பேர் காயம்!



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள இந்தோனேஷிய தூதரகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் தூதரக அதிகாரிகள் நால்வர் உட்பட பத்துப்பேர் காயமடைந்தனர்.

தூதரகத்துக்கு முன்னாலுள்ள கொடிக்கம்பத்திற்குக் கீழே பார்சல் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், அதுவே வெடித்ததாகவும் பிரான்ஸ் உள்துறை அமைச்சர் டொமினிக் பியூ டி வில்லிபின் தெரிவித்தார்.

தூதரகத்தின் கட்டடப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகள் இந்தக் குண்டு வெடிப்பால் உடைந்து பல பக்கமும் வீசப்பட்டதனாலேயே பலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலையடுத்து மற்றய நாட்டு தூதரகங்களுக்கும், அதனைச்சார்ந்த பகுதிகளுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இரண்டாம் முறையாக

## க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிவித்தல்

**2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பாடசாலையூடாக முதற்தடவை தோற்றிய மாணவர்கள், இரண்டாம் முறையாக பாடசாலையூடாக 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பரீட்சைக்குத் தோற்ற விருப்பின், உடன் கல்லூரியுடன் தொடர்புகொண்டு 13.10.2004 புதன் கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.**

**இப்பரீட்சைக்குத் தோற்றாத எந்தவொரு மாணவரும் பரீட்சைக்கு கல்லூரியூடாகத் தோற்றவோ அன்றி அதிபர் ஊடாக விண்ணப்பிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

**க.இராசதுரை,**
**அதிபர்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/3250)


## சமாதானத்துக்கான நோபல் பரிசு கென்யப் பெண்மணிக்கு கிடைத்தது!



இந்த வருடத்துக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு கென்யாவின் சுற்றுச்சூழல் அமைச்சரும், மனித உரிமைகள் ஆர்வலருமான வன்காரி மாத்தாயி (வயது 64) என்ற பெண்மணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

1901 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கத்தொடங்கிய காலத்திலிருந்து நோபல் பரிசுபெறும் முதலாவது ஆபிரிக்கப் பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாத்தாயிக்கு வழங்கப்பட்ட சமாதான நோபல்பரிசானது, ஜனநாயகம் மற்றும் அமைதி முயற்சிகளுக்காகப் போராடும் ஆபிரிக்கர்களுக்கு நல்லதொரு முன்னுதாரணம். என நோபல் பரிசுக்குழு தெரிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டிலிருந்து "கிறீன் பெல்ட் மூவ்மன்ட்" என்ற அமைப்பினை உருவாக்கி சுமார் 10 மில்லியன் மரக்கன்றுகளை சகல ஆபிரிக்க நாடுகளிலும் மாத்தாயி நாட்டி வந்தார். இது காடழிப்பு நடவடிக் கைகளுக்கெதிராக இவர் மேற் கொண்ட பெருமுயற்சியாகும்.

இந்த விருது கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இது எனது சுற்றுச் சூழல் பணிகளுக்கிடைத்த அங்கீகாரம் என மாத்தாயி தெரிவித்தார்.

சுற்றுச் சூழல் என்பது மிகவும் முக்கியமானது. இதனை நாம் அழிப்போமாக இருந்தால், இதற்காகவே யுத்தம் ஏற்படும் சூழ்நிலையொன்று உருவாகி விடுமெனவும் அவர் தெரிவித்தார்.

நோபல் பரிசுக்கு தெரிவான மாத்தாயி விஞ்ஞான மற்றும் சமூக விடயங்களிலும் ஈடுபட்டுள்ளதுடன், அரசியலிலும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் செயற்பட்டு வந்தவரெனவும், நோபல் பரிசுக்குழு தெரிவித்தது.

1901 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டுவரும் நோபல் பரிசில் 12 ஆவது பெண்மணியாகத் தற்போது கென்யாவின் மாத்தாயி இணைந்துள்ளார்.

இது தொடர்பாக கென்ய அரசாங்கப் பேச்சாளரான, அல்பிரட் முத்துயா தெரிவித்ததாவது-

கென்ய நாடு இந்தப்பரிசு மூலம் பெருமிதம் அடைகின்றது. கென்ய வரலாற்றில் இதுவொரு உயர்ந்த பட்சதினமாகும். அத்துடன் மாத்தாயியின் செயலுக்குக் கிடைத்த அங்கீகாரமுமாகும் எனத்தெரிவித்தார்

இந்தச் சமாதான நோபல் பரிசுக்கு 194 பேர் சிபார்சு செய்யப்பட்டிருந்தபோதும், அவர்கள் அனைவரையும் தாண்டி இவருக்கு இது வழங்கப்பட்டமை, குறிப்பிடத்தக்கது.

சமாதானத்துக்கான நோபல் பரிசுத்தொகையாக 1.3 மில்லியன் அமெரிக்கடொலர் எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி ஒஸ்லோவில் வைத்து மாத்தாயிக்கு வழங்கப்படும்.

## பெண் எழுத்தாளருக்கு நோபல் பரிசு



இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவத் துறையில் அமெரிக்காவைச் சேர்ந்த 2 விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதேபோல் பௌதீக வியல்துறையில் 3 அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இரசாயனவியல் துறையில் 2 இஸ்ரேலியர்களுக்கும், ஒரு அமெரிக்கருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது இலக்கியத்துக்கான நோபல் பரிசுபெறுபவரின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் எல்பிரீட் ஜெலினிக் இந்த ஆண்டுக்கான இலக்கியத்துறையில் நோபல் பரிசு பெறுகிறார். நோபல் பரிசுபெறும் 10 ஆவது பெண் இவர். இந்தப் பெண் எழுத்தாளருக்கு டிசெம்பர் 10 ஆம் திகதி சுவீடனின் ஸ்டாக்கோமில் நடக்கும் விழாவில் நோபல் பரிசும், 13 லட்சம் அமெரிக்க டொலரும் வழங்கப்படும்.

## உலக நோக்கு

## ஈராக்கின் பலூஜா நகரில்

# திருமணம் நடைபெற்ற வீட்டின் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல்!

## மணமகள் உட்பட 11 பேர் பலி



(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் திருமணச்சடங்கு நடைபெற்ற வீடொன்றின் மீது அமெரிக்கப் போர்விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் மணமகள் உட்பட 11 பேர் கொல்லப்பட்டதுடன், மணமகன் உட்பட 17 பேர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களுள் ஒரே குடும்பத்ததைச் சேர்ந்த தந்தை மற்றும் ஏழு மகன்கள் அடங்குவதாகவும், காயமடைந்தவர்களுள் 9 பெண்களும், 6 குழந்தைகளும் அடங்குவதாக பலூஜா நகர வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

திருமணச் சடங்கு இடம் பெற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென அமெரிக்கப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் திருமணச் சடங்கு இடம்பெற்ற வீடு முற்றாக அழிந்துள்ளதாகவும், அந்த கட்டட இடிபாடுகளின் உள்ளே இறந்த மற்றும் காயமடைந்தவர்கள் சிக்கியுள்ளதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், அபு முசாப் அல் சர்காவியின் தீவிரவாதிகள் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கப் படைகள் தெரிவித்தன.

அமெரிக்க படைகளின் புலனாய்வுப் பிரிவின் படையினரின் புலனாய்வு பிரிவினர் குறிப்பிட்ட வீட்டில் அபுமுசாப் அல் சர்காவி தீவிரவாதிகள் முக்கிய தலைவர்கள் ஒன்று கூடி தாக்குதற்திட்டம் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருந்தவேளையிலே தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலினால் அபு முசாப் அல் சர்காவியின் ஆலோசகர்கள் உட்பட பல முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். ஆனால், அமெரிக்கப் புலனாய்வுப் படையினரின் இக்கருததினை மறுத்துள்ள பலூஜா நகர வைத்தியசாலை வைத்தியர்கள் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொது மக்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம் காங்கிரஸின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிப்பு!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் நாளை நடத்த விருந்த கட்சியின் மாநாடு தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் முடிவடைந்த பின்னர் நடாத்துவதற்கு கட்சியின் யாழ்மாவட்ட கிளை தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளுக்கமையவும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும் என்ற தொனிப்பொருளில் கட்சியின் மாவட்ட மாநாட்டை யாழ்ப் பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த தினத்தில் விடுதலைப் புலிகளின் முதல் பெண போராளி மாலதியின் நினைவு தினமும் பெண்கள் எழுச்சி நாளும் நடைபெறுவதை அடுத்தும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு வாய்ப்பாகவும் இந்த மாநாட்டை மகளிர் தினம் முடிவடைந்ததும் அடுத்து வரும் நோன்பிற்கு பின்னர் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் யாழ் மாவட்ட கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

இதேவேளை கட்சியின் தலைவர் கலந்துகொள்வதற்கு விடுதலைப் புலிகள் எந்த ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. அத்துடன் கட்சியின் தலைவர் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கான ஒழுங்குகளை செய்து தருவதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதாகவும் கட்சியின் யாழ் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று சந்திப்பு!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுபினர்களுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் - இருதரப்பினரும் தமக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியதாகத் தெரியவருகிறது.

சந்திப்பின் இறுதியில் இருதரப்பினரும் குறிப்பிட்ட கால அட்டவணையின்படி மீண்டும் சந்திப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

சந்திப்புக்கான கால அட்டவணையைத் தயாரிப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிறேமச்சந்திரனும் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பசீர் சேகுதாவூத்தும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விலைவாசி உயர்வுக்கு எதிராக குருநாகலிலும் ஆர்ப்பாட்டம்!

கடந்த தேர்தல் காலங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரியும் - அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தக்கோரியும் நேற்று குருநாகலில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தக்கோரியும், தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நிறைவேற்றத்தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதிலும் நடத்தத் திட்டமிட்டிருக்கும் ஆர்ப்பாட்டங்களின் இரண்டாவது கட்டமாகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கடந்த அரசாங்கம் இரண்டு வருடங்களாகக் கட்டியெழுப்பிய நாட்டின் பொருளாதாரத்தைத் தற்போதய அரசாங்கம் 6 மாதங்களுக்குள் சீர்குலைத்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்

மக்களது போராட்டங்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்

### காவலரண்களை...

செல்ல முற்பட்டபோது அகதிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் முறுகல் நிலை தோன்றிய போதிலும் பின்னர் அது தணிந்து விட்டது. (04)

## சுவிஸ் தூதரக ஆலோசகர் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்!

சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தின் ஆலோசகரான லெனால்ட் பெக் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

இந்தக் குழுவில் சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் பணியாற்றும் பீற்றர் றெயாஸ் மற்றும் கலாநிதி கீதபொன்கலன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் தொடர்பான விபரங்களைக் கேட்டறிவதற்காகவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

### எரிபொருட்களின்...

அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் தற்போது நிலவி வரும் குளிர்கால காலநிலையால் எரிபொருட்களின் தேவை அதிகரித்துள்ளதே இதற்கான காரணம்.

உலகசந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப மண்ணெண்ணெயின் விலையை 16 ரூபாவாலும் டீசலின் விலையை 6 ரூபாவாலும் பெற்றோலின் விலையை 10 ரூபாவாலும் அதிகரிக்கவேண்டிய நிலையை தோற்றுவித்துள்ளது.

அண்மைக்காலமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 8 மில்லியன் நட்டத்தில் இயங்கி வருகிறது.

மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் மானியத்தை வழங்க முன்வந்தால், அதன் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிறந்த சிசுவை கொன்ற...

ஸாருக்கு அறிவித்தார்.

இதனையடுத்து நெல்லியடிப் பொலிஸார் குழந்தையின் பேத்தியாரைக் கைதுசெய்ததுடன், சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு பொலிஸ் காவலும் போடப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மந்திகை ஆதார வைத்திய சாலையில் வைத்து சிசுவின் தாயையும், பொலிஸார் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம், மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை , அல்வாய் கிழக்கு கிராமசேவகர், நெல்லியடிப் பொலிஸார் ஆகியோர் சிசுபுதைக்கப்பட்ட இடத்தையும், சிசுபிறந்த அறையையும் பார்வையிட்டனர்.

இதன்பின் புதைக்கப்பட்ட சிசுவை வெளியில் எடுத்தபோது சிசுவின் மண்டைஓடு வெடித்த நிலையிலும், இடது முழங்கையின் கீழ்ப்பகுதி இல்லாமலும், இருந்தது. இதனால் மண்வெட்டிபோன்ற பலமான ஆயுதத்தால் சிசுவின் மண்டை ஓட்டில் அடித்து கொல்லப்பட்டிருக்கலாமென வைத்திய அதிகாரி தெரிவித் தார்.

இதனையடுத்து மீட்கப்பட்ட சிசுவின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி சிசுவை வைத்தியசாலையில் பு[illegible]து அடையாளமிடுமாறும், இது தொடர்பாக சந்தேகத்துக்கிடமானவர்களை கைதுசெய்யுமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (12)

### சுவிஸ் வெளியுறவு....

அத்துடன், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அதில் ஏற்பட்டிருக்கும் தேக்கநிலை குறித்தும் சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்கு புலிகள் தரப்பு விளக்கிக் கூறியிருந்தது.

இதன்பின்னர் சுவிஸ் வெளிவிவ... குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் போது சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மெக்மிலன் அம்மையார் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

சுதந்திர முன்னணி அரசாங்கம் நிறைவேற்றத்தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதிலும் நடத்தத் திட்டமிட்டிருக்கும் ஆர்ப்பாட்டங்களின் இரண்டாவது கட்டமாகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கடந்த அரசாங்கம் இரண்டு

விக்கிரமசிங்க தெரிவித்தார்

## காவலரண்களை...

செல்ல முற்பட்டபோது அகதிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் முறுகல் நிலை தோன்றிய போதிலும் பின்னர் அது தணிந்து விட்டது. (04)

அண்மைக்காலமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 8 மில்லியன் நட்டத்தில் இயங்கி வருகிறது.

மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் மானியத்தை வழங்க முன்வந்தால், அதன் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருகோணமலை நிலைமை....

நிதிகளைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவல்படையினர் இருவரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், இவர்களது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் தான் நேரில் தெரிவிக்கவுள்ளதாகவும், போர்நிறுத்த உடன்படிக்கை திருகோணமலை மாவட்டத்தில் எவ்வாறு அமுல்படுத்தப்படுகிறது - போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன என்பது தொடர்பாக நேரில் அவதானிப்பதற்காகவே திருகோணமலைக்கு விஜயம் செய்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் செயலாளர் அநுரா பண்டார -

போர்நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்ட பின்னர் சமாதான செயலகமும் கண்காணிப்புக்குழுவும் இயங்குகின்றதே தவிர இவை இரண்டாலும் எந்த நன்மையும் இல்லை. விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினர் இருவரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண விடுதியில், சமயப் பிரமுகர்களையும் உள்ளூர் பிரமுகர்களையும் சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. எனினும் இந்தச் சந்திப்பில் 5 பௌத்தகுருமாரைத் தவிர எவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்புக்கு - வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், அரச அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் இவர்கள் கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. எனவே சந்திப்பில் கலந்துகொண்ட ஐந்து பௌத்தகுருமாரை மட்டும் சந்தித்து திருமலை மாவட்ட நிலைமைகளை ஜயந்த தனபால கேட்டறிந்தார்.

பிற்பகல் 4.30 மணியளவில் கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று கடற்படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜயந்த தனபால் -

தனது திருகோணமலை விஜயத்தின்போது கிடைத்த தகவல்களை அறிக்கை வடிவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்போவதாகவும் ஜனாதிபதிதான் நடவடிக்கை எடுப்பார் எனவும் தெரிவித்தார். (04)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# திருகோணமலை மாவட்டத்தில் நேற்று....

ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகள் தொடர்பாக ஆற்றிய உரையைக் கண்டித்தும்

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் எனக்கோரியும், திருமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையால் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய ஹர்த்தாலின்போது சிங்கள தமிழ், முஸ்லிம், வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை. ஹர்த்தால் நடைபெற்றாலும் அரச வங்கிகளைத் திறக்குமாறு கொழும்புத் தலைமையகம் அறிவித்திருந்த போதும் அந்த மாவட்டத்திலுள்ள அரச வங்கிகள் எவையும் திறக்கப்படவில்லை. பஸ் போக்குவரத்துக்கள் எவையும் இடம்பெறவில்லை திருமலை நகர சந்தையும் நேற்றய தினம் கூடவில்லை.

பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை. இவற்றிலும் சிங்களப் பாடசாலைகளிலும், பெருமளவில் மாறவர வருகை இருக்கவில்லை. அரசாங்க நிறுவனங்கள் எவையும் இயங்கவில்லை. நேற்றய தினம் திருமலை நகரமே வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.

இதேவேளை நேற்று மாலை 4.15 மணியளவில் திருமலை அநுராதபுரம், சந்திப்பகுதியில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் ஊர்காவற்படையினர் மற்றும் மோட்டார் சைக்கிள் ரோந்து படையினர் ஆகியோரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் திருமலை பொதுவைத்தியசாலையின் விபத்துச் சேவைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

திருமலை - அநுராதபுரம் சந்திப் பகுதியில் மூன்று இளைஞர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திரும்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்து தமது கடும் கண்டனத்தை தெரிவித்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவமானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மிகக் கடுமையாகப் பாதிக்கும் இத்தகைய நடவடிக்கைகளை படையினர் நிறுத்திக்கொள்வதை கண்காணிப்புக் குழுவினர் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும், அவர் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை நேற்றைய ஹர்த்தாலை விடுதலைப் புலிகளே பின்நின்று நடத்தியதாக அரசாங்க ஊடகங்கள் தெரிவித்த செய்தியையும், எழிலன் மறுத்ததுடன் தமது கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கதவடைப்பு போராட்டத்துக்கும், எமது அமைப்புக்கும் எந்தவித தொடர்புமில்லை. தமிழ் மக்கள் பேரவை என்ற சுயாதீனமான அமைப்பே இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. எனவே பொறுப்பற்ற விதமாக அரச ஊடகம் வெளியிட்ட செய்தியானது எமக்கு அசௌகரியமான ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவும் அவர் தெரிவித்தார்.

(04, 10)

# சுவிஸ் வெளியுறவு....

அத்துடன், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அதில் ஏற்பட்டிருக்கும் தேக்கநிலை குறித்தும் சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்கு புலிகள் தரப்பு விளக்கிக் கூறியிருந்தது.

இதன்பின்னர் சுவிஸ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் -

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் காட்டிவரும் அக்கறையையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையிலேயே சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் கல்மிரே அம்மையார் நேற்று கொழும்புக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இவர், இருதரப்பினரையும் மீளவும் சமாதான முயற்சிகளில் இறங்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் போது சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மெக்மிலன் அம்மையார் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள் பலரையும், எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தவிருப்பதுடன்,

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து பேசவிருப்பதாகவும் சுவிஸ வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்[illegible].

இலங்கைக்கு உதவி வழ[illegible]ம் நாடுகளில் சுவிஸ் முக்கிய நாடாக இருப்பதுடன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் தனது பிரதிநிதிகளை ஈடுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## சேனாதிராஜா முகுந்தன்

யாழ்ப்பாணம் 81, மணிக்கூட்டுவீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவராகிய சேனாதிராஜா முகுந்தன் (07-10-2004) வியாழக்கிழமை இரவு அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா, காலஞ்சென்ற விஜயலட்சுமி (விஜயா) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு நாகரத்தினத்தின் பேரனும், ந.தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் சர்ஜன்) நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், லயன் Dr.மு.கதிர்காமநாதன் (சுகாதார வைத்திய அதிகாரி மன்னார்), நாகேஸ்வரி கதிர்காமநாதன், வரதராஜா, கமலாதேவி (இந்தியா), பாலசுப்பிரமணியம் (கனடா), மு.கனகேந்திரநாதன் (தென்னாபிரிக்கா), லயன் க.மு.பத்மநாதன் (உரிமையாளர், யாழ்.மருந்தகம் Wesco Pharmacy) பத்மாதேவி ஆகியோரின் மருமகனும், திருமதி லலிதா ராம்சேகரின் அன்புச் சகோதரனும் சுஜாதா (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), சுதாகர் (மருத்துவபீடம் ரஷ்யா), மகேசன் (லண்டன்), மதியழகன் (கனடா), சுரேஸ் (திரைப்பட இயக்குநர் - இந்தியா) பிரஷ்ணா, பிரவீன், பிறினசிகா ஆகியோரின் மைததுனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.10.2004) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ந.தனபாலசிங்கம்**
**லயன் K.M.பத்மநாதன்**
**(யாழ்.மருந்தகம் - (லயன் மாவட்டத் தலைவர் பார்வைக்கு முதலிடம்)**
**லயன் Dr. M.கதிர்காமநாதன்**
**(லயன் மாவட்ட இணைப்பாளர்)**

*81,மணிக்கூட்டுவீதி,*
*யாழ்ப்பாணம்.*

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.